# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 07 சுகந்தம் : 27 (ஐப்பசி - மார்கழி) 2014



முருகப்பன் கணபதிப்பிள்ளை
(முனாக்கானா)

65/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!




தொடர்புகளுக்கு....
அபான்ஸ் காட்சியறை,
263, 265, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 065-2227895

(நிபந்தனைகளுக்குட்பட்டது.
முன்னறிவித்தல்களின்றி
விலைகள் மாற்றப்படலாம்.
இங்கு காட்டப்பட்டுள்ள
உருக்கள் நிஜத்திலும்
வேறுபடலாம்.)

Life's Good

AD/0020

LG Abans
Show Room

10 OCT 2014

ஆரம்பம் : 06. 04. 2008

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com
இணையம்:- www.thendralbook.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திரு. வீ. கே. ரவீந்திரன் (ரவிப்ரியா)
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம்.ஆ.அரசரெத்தினம்

**ஓவியம்**
வே. ஹோகுலரமணன்

**கணனி வடிவமைப்பு**
த.சங்கர்

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)

## ஜீவாவுக்கு வாழ்த்துக்கள் !!!

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் 2013 ஆம் ஆண்டுக் கான **"இயல் விருதை"** டொமினிக் ஜீவாவுக்கு அவருடைய 88 ஆவது பிறந்தநாளை ஒட்டி 17/07/2014 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத் தில் வழங்கியது.

இந்த விருதானது பரிசுக் கேடயம், 2500 டொலர் பணப்பரிசு ஆகியவற்றைக் கொண்டதாக வழங்கப்பட்டது. **"ஈழத்தமிழ் நவீன எழுச்சியின் சின்னம்"** எனப் போற்றப்படும் இவர் இந்த விருதைப்பெறும் 15 ஆவது ஆளுமை ஆவார்.அத்தோடு இவர் இதுவரை 5 சிறுகதைத் தொகுப் புக்களை வெளியிட்டுள்ளார். 5 கட்டுரைத் தொகுதிகளும் எழுதியிருக் கிறார். **"மல்லிகை"** எனும் இலக்கியச் சிற்றிதழும், **"மல்லிகைப் பந்தல்"** எனும் பதிப்பகமும், இளவயது முதல் அவர் பின்பற்றிய அரசியல் மார்க்கமும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அவரது பணிகளுக்கான விதை நிலங்களாக

இருந்து வந்துள்ளதை யாரும் மறுதலிக்க முடியாது.

பல்வேறு நிலைப்பட்ட அறிஞர்கள், கல்வியியலாளர்கள், படைப்பாளிகள் போன்ற பலரது பங்களிப்புக்களுடன் **"மல்லிகை"** இதழ்களும், **"மல்லிகைப் பந்தல்"** வெளியீடுகளும் இன்று பல்கலைக்கழகப் பட்டமேற்படிப்புக்கான ஆய்வுக் களங்களாகப் பயன்படுகின்றன.

இவ்வாறாக தனது வாழ்நாளை பல்வேறு விமர்சனங்கள், எதிர்ப்புக்களையும் தாண்டி அர்ப்பணித்த இவருக்கு வழங்கப்படும் விருதானது சிற்றிதழாளர்களைக் பெருமை கொள்ளச்செய்கிறது. இவ்வேளையில் **"டொமினிக் ஜீவாவுக்குத்"** **"தென்றலும்"** தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும். தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம்-

# நூற்குற்றம் பத்து



உலகில் மாற்றம் என்பது மாறாத நியதி. மாறாது இருப்பவை பரிணாம வளர்ச்சியில் மாண்டு மறைந்து விடும். எனினும் அடிப்படை நியதிகள் பல மாற்றமின்றியே இருக்கும். பேசும் போதும், எழுதும் போதும் குற்றங்களை நீக்குதல் சிறப்புடையதாகும். நன்னூலார் பத்து விடயங்களை நூலுக்குரிய குற்றமாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**“குன்றக் கூறன் மிகபடக் கூறல்**
**கூறியது கூறன் மாறு கொள்ளக் கூறல்**
**உழு உச் சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்**
**வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்**
**சென்று தேய்ந் திறுத னின்று பயனின்மை**
**என்றிவை யீரைங் குற்ற நூற்கே”** - (நன் - சூத் - 12)

இச்சூத்திரத்தின் பொருள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. குறித்த பொருளை விளக்குவதற்கு வேண்டும் சொற்களிற் குறைவுபடச் சொல்லுதல், குறித்த பொருளை விளக்குவதற்கு வேண்டும் சொற்களிலும் அதிகப்படச் சொல்லுதல், முன்சொன்ன பொருளையே பின்னும் சொல்லுதல், முன்சொன்ன பொருளுக்கு பின் சொல்லும் பொருள் விரோதப்படச் சொல்லுதலும் - குற்றமுடைய சொற்களைச் சேர்த்தலும், இதற்குப் பொருள் இதுவோ – அதுவோ என மயங்க வைத்தலும், பொருள் வெளிப்படையாகத் தோற்றச் சொற்களைச் சேர்த்தலும், சொல்லத்

தொடங்கிய பொருளை விட்டு இடையிலே மற்றொரு பொருளை விரித்தலும், செல்லச் செல்ல சொன்னடை பொருளடை தேய்ந்து முடிதலும் சொற்கள் இருந்தும் ஒரு பிரயோசனமும் இல்லாமற் போதலும் நூலுக்குப் பத்துக் குற்றமாகும்.

குன்றக்கூறல், மிகைபடக் கூறல் என்பவைகளுக்குரிய அளவு என்னவென்பது நியதி காட்டப்படவில்லை. எனினும் யானையின் உருவத்திற்குப் பூனையின் கால் அமைப்பது குன்றக்கூறல் எனவும், பூனையின் உருவத்திற்கு யானையின் கால் அமைப்பது மிகைபடக்கூறல் எனவும் கொள்ளலாம். அரைத்த மாவை அரைத்தல் என்பது கூறியது கூறலை விளக்கும். பொல்லைக் கொடுத்து அடிவாங்குதல், ஆப்பிழுத்த குரங்கு என்பவை மாறு கொள்ளக்கூறி முன்னுக்குப் பின் முரண்படுவதை விளக்கும். தமிழில் மரபுச் சொற்களின் பயன்பாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. மழை எறித்தது, வெயில் பெய்தது என்பவை வழுஉ சொற்கள் புணர்த்தப்பட்டவையாகும். அதாவது மழை பெய்தது, வெயில் எறித்தது என்பவையே மரபு. ஐயம், திரிபு, அறியாமை இம்மூன்றையும் நீக்குவதே அறிவுடமை. இதுவோ – அதுவோ என ஐயப்படுதலும், ஒன்றை மற்றொன்றாகத் தீர்மானித்தலும் அறியாதிருப்பதும் மயங்க வைப்பதாக அமையும்.

**"சுவை"** என்பது சுவைக்கும் போதுதான் தெரிய வேண்டும். அதற்காகவே அது மறைத்து வைக்கப்பட்டிருக்கும். மிக எளிதாகப் பொருள் தெரியும்படி பேசுவதும் - எழுதுவதும் குற்றமாகும். சொல்ல வந்த விடயத்திற்குப் பொருத்தமற்ற – தேவையற்ற விடயங்களைச் சொல்வது மற்றொன்று விரித்தலாகும். அடிக்கரும்பில் இருந்து நுணிக்கரும்பை நோக்கிச் சாப்பிடும்போது சுவை குறைந்து போவது போல தொடக்கத்தில் சுவைபடத் தொடங்கி படிப்படியாக சுவை குறைவடைந்து போவது சென்று தேய்ந்திடுதலாகும். சில சொற்கள் தேவையற்ற விதத்தில் பயன்படுத்தப் பட்டிருப்பது நின்று பயனின்மையாகும். உதாரணமாக :- மேலும், மற்றும், சரியோ, விளங்கிற்றா என்ற வார்த்தைகளைச் சிலர் அடிக்கடி பயன்படுத்துவதை நாம் கேட்டிருக்கிறோம். அவற்றை ஊன்று கோல் வார்த்தைகள் என்றும் குறிப்பிடுவர். இவைகள் குற்றங்கள் எனக் கருதப்படுவதால் இவற்றை நீக்கி பேசியும், எழுதியும் பெருமையடைவோம்.

**வாசகர்கள், எழுத்தாளர்களின் தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

**(ஆசிரியர்)**

# முருகப்பன் கணபதிப்பிள்ளை



மட்டக்களப்பு மாவட்டத்தின் இயற்கை எழில் நிறைந்த, வந்தாரை இன்முகத்துடன் வரவேற்கும் ஆரையம்பதியில் பிறந்து, தனது 91 ஆவது அகவையில் கால்பதித்திருக்கும் மு.கணபதிப்பிள்ளை (மூனாக்கானா) தனது 60 ஆண்டுகால வைரவிழாத் திருமண நிறைவாண்டையும் அண்மையில் கல்வியியலாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், குடும்பத்தார், உறவினர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டிருக்கக் கொண்டாடினார்.

## தென்றலின் தேடல்

-க.கிருபாகரன்-

இத்தகைய பெருமைகள் பல பொருந்திய மு.கணபதிப்பிள்ளையைத் (மூனாக் கானா) **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக்கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

### குடும்பப் பின்புலம்

முருகப்பன் - தங்கம்மா தம்பதியினருக்கு மகனாக 1924.01.22 அன்று மகனாகப் பிறந்தார். தனது வாழ்க்கைத் துணையாக சின்னப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தார். இவருக்கு சந்திரகுமாரி (கணித ஆசிரியை), சந்திரகுமாரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்) , சூரியகுமாரன் (வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி) , சூரியகுமாரி (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை) நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

இலங்கையின் ஆற்றல் மிக்க – மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே "**தென்றலின் தேடல்**" எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### பாடசாலைக் காலமும், தொழிலும்

தனது கல்வியை ஆரையம்பதி இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் மேற்கொண்டார். பின்னர் தொழிற்கல்வியை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்(1947/1948) பூர்த்தி செய்தார். இதனைத் தொடர்ந்து ஆசிரியப் பணியில் இணைந்து கொண்ட மூனாக்கானா கண்டி றம்புக்- எல அ.த.க. பாடசாலையில் 1949 இல் நியமனம் பெற்றார். இதனைத் தொடர்ந்து பல பாடசாலைகளிலும் கடமையாற்றி , இறுதியாக மட்டக்களப்பு ஆரையம்பதி கோயில்குளம் விநாயகர் வித்தியாலயத்தில் கடமையாற்றி 1981 இல் ஓய்வு பெற்றார்.

### கலை, இலக்கிய ஈடுபாடு

### ஆ) கவிதை

1. புளுகுப்புராணம், காலாகோலம் கவிதைகள் **"தினகரன் வாரமஞ்சரி"** இல் தொடர்ச்சியாக பல வாரங்கள் வெளிவந்தன.
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கவிதைக் கலசம் நிகழ்ச்சியில் **"கடவுளும் நானும்"** என்ற கவிதை அனேக நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டது.
3. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இரு தடவைகள் முதலாவது பரிசைப் பெற்றுள்ளார்.
4. **"தீர்த்தக்கரைதனிலே"** என்ற தலைப்பில் மாமாங்கேஸ்வரர் மீது பாடப்பட்ட பாடல் இறுவட்டில் இவர் எழுதிய **"மாமாங்கம் என்று ஒரு ஊர்"** என்ற பாடல் இடம்பெற்றுள்ளது.
5. நகைச்சுவைக் கவிதைகளிலே **"எம்பிக்குக் காவடி தம்பி"** என்ற கவிதை பலரது பாராட்டையும் பெற்றது.
6. கிழக்கு மாகாண சபைக்கான கீதமாக இவரது கீதம் தேர்வுசெய யப்பட்டது.

### ஆ) கூத்து

1. அலங்காரரூபன் கூத்து தமிழ்மொழித் தினப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

2. லெட்சுமி கல்யாணம், பரிசாரிமகன், சூறாவளிக்கூத்து, அண்ணனும் - தங்கையும், முதியோரைக் காப்போம் என்னும் கூத்துக்கள் இவரால் எழுதப்பட்டவை.

3. 1949 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் **"மட்டக்களப்பில் நாட்டுக் கூத்து"** பற்றி 15 நிமிடங்கள் பேசியுள்ளார்.

4. மட்டக்களப்பு வெபர் மைதானத்தில்1976 இல் இடம்பெற்ற அகில உலக தமிழாராட்சி மாநாட்டை ஒட்டி இலங்கைக் கிளை நடத்திய கலைவிழாவில் ஆடப்பட்ட அலங்காரரூபன் கூத்தில் அலங்காரரூபனாக நடித்துள்ளார். அத்தோடு 1977 இல் இடம்பெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வருடாந்த மாநாட்டில் **"பரிசாரி மகன்"** என்ற கூத்தை எழுதியதோடு, அதில் சாத்திரியாராகவும் நடித்துள்ளார்.

## நாடகம்

**"இருலேகா","எல்லோரும் ஓரினம்" , "கடிதம் வந்தது" ,"அப்பாவைத் திருத்திய மகன்", "யமலோகத்தில்" , "சம்பந்தி", "இளங்கோ துறவு"** ஆகிய நாடகங்களை எழுதியுள்ளார்.

இதில் பதுளை கனிஷ்ட வித்தியாலய மாணவிகளைக் கொண்டு பழக்கிய **"இளங்கோ துறவு"** என்ற நாடகம் ஊவா மாகாணத் தமிழ்த் தினப்போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றது.

## வில்லுப் பாட்டு

**"குடி" , "கேடு", "ஒன்றே இனம்", "கதிராமன் புத்திரன்", "விவேகானந்தர்", "பெற்று விட்டால் போதுமா?"** போன்ற வில்லுப்பாட்டுகளை எழுதிப் பழக்கியுள்ளார்.

## கிராமிய நடனங்கள்

**"சீரழியும் சின்ன வயது", "புதுமைப்பெண்", "கிழவனும் - கிழவியும்", "விவசாயத் தொழிலே வேண்டும்"** போன்ற தலைப்பில் பல கிராமிய நடனங்கள் இவரால் ஆக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன.

## எழுதி வெளியிட்ட நூல்கள்

1.இலக்கிய நெஞ்சம் - இது பத்திரிகையில் எழுதி வெளியிட்ட இலக்கியக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் (2002)

2. கவிதை நெஞ்சம் - பத்திரிகைகள், வானொலி, இலக்கிய விழாக்கள், விழா மலர்கள், கவிதைப் போட்டிகள் போன்றவற்றில் எழுதி வெளிவந்த கவிதைகளின் தொகுப்பு நூல் - (2008)

3. **"கூத்து நெஞ்சம்" -**

**"நாடக நெஞ்சம், வில்லிசை நெஞ்சம், கிராமிய நடனங்கள்"**ஆகிய நூல்களை வெளியிடவுள்ளதாகவும், இதற்கான அனுசரணையினை நிதிவளம் படைத்தோர் வழங்கினால் விரைவில் வெளியிட முடியும் என்ற ஆதங்கத்தினைத் **"தென்றல்"** ஊடாக விடுப்பதாகவும் சிரேஷ்ட எழுத்தாளர் மூனாக்கானா தெரிவித்தார்.

## பெற்ற விருதுகள்

1.மட்டக்களப்புக் கலாசாரப் பேரவை வழங்கிய **"கலைமணி விருது"**.

2. இந்து கலாசார அமைச்சு வழங்கிய **"கலாபூஷணம் விருது"**.

**3.** மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை பொன்விழாவில் வழங்கிய **"மக்கள் கவிமணி விருது"**.

**4.** மட்டக்களப்புக் கல்விச் சமூகத்தினால் நடத்தப்பட்ட விழாவில் வழங்கப்பட்ட **"கலையரசு விருது"**.

**5.** கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினால் வழங்கப்பட்ட **"தலைக்கோள் விருது"**.

**6.** கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட **"ஆளுனர் விருது"**.

**7.** மண்முனைப் பிரதேசத்தில் முதலாவது சிரேஷ்ட பிரஜையாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாவது சிரேஷ்ட பிரஜையாகவும் தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டுள்ளார்.

## சமூக சேவைகள்

1.வகுப்புக் கலவர காலத்தில் மட்டக்களப்பு – அம்பாறை பிரஜைகள் குழு உறுப்பினராகக் கடமையாற்றியமை.

2. கண்டியில் ஆசிரியராகப் பணியாற்றும்போது மத்திய மாகாணத் தமிழ்ச் சங்க முன்னாள் உறுப்பினர்.

3. ஆரையம்பதி பொது நூலகத்தின் வாசகர் வட்டத் தலைவர்.

4. வீட்டுக் கை வைத்தியம், சோதிடம் சம்பந்தமான ஆலோசனை வழங்கல்.

இவ்வாறாகத் தனது 91 ஆவது வயதிலும் எழுதிக் கொண்டிருக்கும் சிரேஷ்ட எழுத்தாளர் மூனாக்கானாவின் எழுத்தாக்கல் பணிகள் தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.

மட்டக்களப்பு நூதனசாலை

# தொன்மையைப் பறைசாற்றும் சான்றுகள் 2





செல்வி க. தங்கேஸ்வரி பி.ஏ,
தொல்பொருளியல் சிறப்பு

## கொக்கட்டிச்சோலைத் தேர்ச்சிற்பம்

இங்கு வைக்கப்பட்டுள்ள தேர்ச்சிற்பமானது கொக்கட்டிச்சோலையில் காணப்படும் தேரிலிருந்து பெறப்பட்ட ஒரு சிற்பத் தகடாகும். கொக்கட்டிச்சோலையின் பண்டைய கட்டிடம் பாண்டவர் காலப்பாணியில் அமையப் பெற்றதாகும். திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயமும் இந்தப் பாணியில் அமையப் பெற்றதாகும்.

இங்கு இரண்டு தேர்கள் இன்று காணப்படுகின்றன. மட்டக்களப்பின் மன்னன் தருமசிங்கன் காலத்தில் அமைக்கப்பட்ட இத்தேர்கள் இலுப்பை மரத்தில் கடையப் பெற்றதும், அழகான சிற்ப அமைப்புக் கொண்டதுமாகும். கலிங்க மாகோன் காலத்தில் கொக்கட்டிச்சோலை நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டதோடு இன்றும் அது நடைமுறையில் உள்ளது. கலிங்க மாகோன் (1215-1255) கிழக்கிலங்கையில் பல கோவில்களில் நிர்வாகம் வகுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதே காலப்பகுதியிலேயே கலிங்க நாட்டிலே ஒரிசாவில் அனந்தவர்மன் சோடகங்கன் காலத்தில் மூன்று தேர்கள் உருவாக்கப்பட்டு தேரோட்ட முறையும், கஞ்சிமுட்டி கூறும் முறையும் ஏற்படுத்தப்பட்டது.

இத்தகைய பாரம்பரியம்மிக்க இத்தேர்ச்சிற்பத் தகடு இந்த நூதனசாலையில் உள்ளது பாரிய விடயமாகும். இன்று பல்வேறு முறைகளால் எமது பாரம்பரியங்கள் அழிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும்

போகின்ற தருணத்தில் இதன் முக்கியத்துவம் மக்களால் உணரப்பட வேண்டியதொன்றாகும்.

## ஏடுகள், நாணயங்கள்

இந்த நூதனசாலையில் பலவிதமான ஏடுகள் கிடைக்கப் பெற்றன. இவை இன்று கவனிப்பாரற்றுக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. வைத்திய ஏடுகள், மந்திர ஏடுகள், கூத்து ஏடுகள், மட்டக்களப்பு வரலாறு சம்பந்தமான ஏடுகள் எனப் பலதரப்பட்ட ஏடுகள் பெறப் பட்டு இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

அவை கதிர்காமத்து அம்மானை ஏடு, வதனமார் பந்தாசி ஏடு- மந்திர ஏடு, சரித்திர ஏடு, மட்டக்களப்பு மண்முனை வரலாறு, உன்னரசு கிரி சரித்திர ஏடு, விஷவைத்திய ஏடு, எண்ணை வாகடம் ஏடு, அலங்காரரூபன் நாடக ஏடு, சாம்பேந்திரன் நாடக ஏடு, அங்காதி பாதம் ஏடு, கண்ணகி குளிர்த்தி ஏடு, பிள்ளையார் கதை ஏடு, குளிகை வாகடம் ஏடு, நிகண்டு சம்பந்தமான ஏடு என்பனவாகும். இவ்வேடுகள் அனைத்தும் திருமதி செல்வ நாயகம், செல்வி க.ஜெயானந்தினி – பிரதான வீதி , பாண்டிருப்பு என்போரால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளமை ஒரு சிறப்பான செயற் பாடாகும். இவை பற்றிய விளக்கங்கள் பின்னால் குறிப்பிடப்படும். இவை தவிர கன்னன்குடா ப.குருபரன், க.மாணிக்கம், கொத்தியாபுரி மாணிக்கப்போடி ஜெயசீலன், பிள்ளையாரடி ஆ.கயிலாயபிள்ளை என்போர் வள்ளியம்மானை போன்ற கூத்துக்கலை ஏடுகளை வழங்கியுள்ளனர். மேலும் சில ஏடுகள் வேதநாயகம் - கிரான் குளம், அலையப்போடி தம்பாப்பிள்ளை – செங்கலடி ஆகியோர் (சிறிய வைத்திய ஏடுகள்) வழங்கியுள்ளனர். இவ்வேடுகள் அனைத்தையும் பொதுவான சில பிரிவுகளுக்குள் உட்படுத்தலாம்.

அ) கூத்து ஏடுகள் ஆ) வைத்திய ஏடுகள் இ) வழிபாட்டு ஏடுகள்

முதலில் கூத்து ஏடுகள் பற்றிப் பார்த்தல் பொருத்தமானது.



## கூத்து ஏடுகள்

இந்த நூதனசாலையிலே கூத்து ஏடுகளாக சாம் பேந்திரன் நாடகம், அலங்காரரூபன் நாடகம், அனுருத்திரன் நாடகம்



ஆகியன உள்ளன. இவைகளை நூலுருவில் எழுதி வெளியிட வேண்டும் என்றெல்லாம் அப்போது இருந்த கலாசாரப் பேரவை திட்டமிட்டது. ஆனால் செயற்படுத்த முடியாமல் போய்விட்டமை துரதிஷ்டமே. காரணம் அப்போதைய அரச அதிபர், கலாசார உத்தியோகத்தர் மாற்றம், சில உறுப்பினர்களது இறப்பு போன்றனவாகும். எனவே இவ்வேடுகள் பற்றிய சுருக்கமான தகவல்கள் இங்கு தரப்படுகிறது. பொதுவாகக் கூத்து ஏடுகள் புராண, இதிகாசங்களிலிருந்தே தமக்கான கதைகளைப் பெற்றுள்ளன. சில கற்பனையான கதைகளும் உள்ளன. சாம்பேந்திரன் கூத்து என்று கூறாமல் சாம்பேந்திரன் நாடகம் என்றே கூறப்பட்டுள்ளது. பொதுவாகக் கூத்துக் கொப்பிகளை எடுத்துப் பார்த்தால் நாடகம் என்றே கூறப்பட்டிருக்கும். பொதுவாக இக்கூத்துக் கலையின் பிறப்பிடம் மட்டக்களப்பாக இருக்கலாம் என்ற ஓர் ஐயப்பாடும் உண்டு. மட்டக்களப்பிலே அந்தளவுக்குக் கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன; இன்றும் ஆடப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பிலே பயிலப்படும் கூத்துக்களில் வடமோடி, தென்மோடி என்ற ஆட்ட நுணுக்கங்கள் உண்டு. இக்கூத்துக்கள் எல்லாமே ஏட்டு வடிவிலேயே உள்ளன. இந்த ஏடுகளில் இருப்பவைகளை சாதாரண எழுத்துக் கொப்பிகளில் எழுதிப் பாவிப்பர். இவை **"கூத்துக் கொப்பி"** என்றழைக்கப்படும்.

பொதுவாக ஏடுகள் அனைத்துமே பனையோலையில் எழுத்தாணியால் எழுதப்பட்டவையாகும். பல்வேறுபட்ட ஏடுகள் இன்றும்கூட கிராமப்புறங்களில் முடங்கிக் கிடப்பதைக் காணமுடியும். பேராசிரியர் சி.மௌனகுரு தனது **"மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்"** எனும் பாரிய நூலிலே இவற்றை வகைப்படுத்திக் காட்டியுள்ளார். அத்தகைய ஏடுகளே இந்த நூதனசாலையில் காணப்படுவதுமாகும். இங்கு குறிப்பிடும் மூன்று ஏடுகளும் அதாவது சாம்பேந்திரன் நாடகம், அலங்காரரூபன் நாடகம், அனுருத்திரன் நாடகம் என்பன தென்மோடிக் கூத்து ஏடுகளாகும்.

(தொடரும்...)

கவிஞர் கலாபூஷணம்
**கா.சிவலிங்கம்,**
மட்டக்களப்பு



# கோர தாண்டவம்



உரசியே தரைக்கன்னி தன்னை நாளும்
உச்சிமோந்தே அணைத்து முத்தமிட்டு
சரசசல்லாபமிடும் கடலே நீதான்
சுனாமியாய் மாறியதும் ஏனோ? சொல்வாய்?

பிடித்ததோ மதம் அன்றிப் பேயோ? மதுவை
பருகியதால் உண்டான வெறியோ? அதனால்
துடித்தனரே மக்கள் அதை அறிவாயோ? உன்
தண்டனைக்கு மக்களது குற்றந்தான் என்ன?

உன்னசுர வாயாலே நொடிப் பொழுதில்
உயிர், உறவு, உடமையொடு வதிவிடங்கள்
தன்னையுமே நீவி முங்கி ஏப்பம் விட்டாய்
தாயகமே சுடுகாடாய் ஆனதன்றோ?

விதவை, அனாதை, தனிக்கட்டை யென்றும்
விரும்பாத அகதி, முடம், ஊனமென்றும்
பதவிகளையா கொடுக்க நீயும் வந்தாய்?
பரிதவிக்க விட்டன்றோ உடனே சென்றாய்

ஈவிரக்கமே யில்லாச் சுனாமியே - நீ
ஈன்றெடுத்த தாய், தந்தையர்கள் தம்மை
தீவிரமாய்ப் பலி கொண்டதாலே சேய்கள்
தவிக்கின்றார் அனாதைகளாய்த் தரணி தன்னில்

கோர தாண்டவம் ஓய்ந்து ஆண்டு பத்து
கடந்தாலும் உன் தடங்கள் இன்னுமுண்டு
பாரதப் போர் நடந்த களத்தைப் போன்று
பார்க்குமிடம் எங்கனும் உன் சின்னமுண்டு!!!

பழையூரான்

# நீத்தார் நினைவு

## தமிழ் இலக்கிய உலகில் தடம் பதித்த
# சாரல் நாடான்



கவிதையில் ஆரம்பித்து, சிறுகதைகள் படைத்து, மொழி பெயர்ப்புச் செய்து, கட்டுரைகள் பல எழுதி, தேடல்கள் மிகுந்த ஆய்வாளராகப் பரிணமித்து, சாரல் பதிப்பகம் அமைத்து – அதன் மூலமாக மலையக நூல்கள் பலவற்றை வெளியிட்டுப், பேச்சாளராகிச், சிற்றிதழ் நடத்தி, மலையகக் கலை- இலக்கியப் பேரவையின் தலை வராகச் செயற்பட்டு இலக்கிய உலகுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய உன்னத மாமனிதரை முழு உலகுமே இழந்து தவிக்கிறது.

இவர் தனது கல்லூரி நாட்களிலேயே கவிதை எழுத ஆரம்பித்து, மலைமுரசு, வீரகேசரியின் தோட்ட மஞ்சரி, தினகரன் என்று எழுத்துப் பணியைத் தொடர்ந்தார்.

இவர் ஆசிரியராகத் தொழிலை ஆரம்பித்து (கண்டி அசோகா வித்தியாலயம்) வாழ்வுப் போராட்டத்தில் பல உத்தியோகங்களை மேற்கொண்டு இறுதியில் தேயிலைத் தொழிற்சாலையின் உயர் அதிகாரியாகப் (ரீ மேக்கர்) பணியாற்றி ஓய்வு பெற்றார்.

அன்னார் சி.வி . சிந்தனைகள் (1986), தேசபக்தன் கோ.நடேசய்யர்(1988), மலையகத் தமிழர் (1990), மலையக வாய்மொழி இலக்கியம் (1993), மலைக் கொழுந்தி சிறுகதைகள் (1994), மலையகம் வளர்த்த தமிழ் (1997), பத்திரிகையாளர் நடேசய்யர் (1998), இன்னொரு நூற்றாண்டுக்காய் (1999), மலையக இலக்கிய தோற்றமும் -வளர்ச்சியும் (2000) ,பிணந்தின்னும் சாத்திரங்கள் (2002), மலையகத் தமிழர் வரலாறு (2004), பேரேட்டில் சில பக்கங்கள் (2005), இளைஞர் தளபதி இரா.சிவலிங்கம் (2010), சி.வி. வேலுப்பிள்ளை (2013) ஆகிய 14 நூல்களை வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளார்.

இவ்வாறு மலையக மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட சாரல் நாடானுக்குத் **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# எம்மை வாழ்த்தும்



அழுக்கடை நாற்றம் மூக்கினைத் துளைக்க
அகப்பட்ட உணவை விழுங்கிக் கரைந்து
குழுக்களாயுண்ணத் தனதினத்தாரைக்
கூவியழைக்கும் காக்கையைப் பாரீர்

பருத்த வுணவைப் பலபேரொன்றாய்ப்
பற்றுடன் தூக்கி ஒற்றுமை காட்டி
இருப்பிடம் நோக்கி அணியுடன் செல்லும்
எறும்பத னொற்றுமை எமக்கது வுண்டோ

பறிப்பது வொன்றே தறிகெட்ட தொழிலாய்
பண்பதுமின்றி உண்மையைக் கொன்று
நெறியற்று வாழ்வை நிலைத்திட அலைந்து
நீசனாய்ச் செல்வோர் கண்டது என்ன?

அடுத்தவன் குடியை அடுத்துக் கெடுத்து
அகப்பட்ட இன்பம் கொள்முதலதுவாய்
மடுப்பதே தொழிலாய் கழிந்தன வாழ்வாய்
மண்ணில் விளைந்த அறுவடை தீதாய்

போட்டி பொறாமை காட்டிய பெருமை
போக்கிரித் தனத்தால் மனிதம் தொலைந்து
மூட்டிய பகையால் ஒற்றுமை நீங்க
முயன்றிங் குழைத்தால் பெறுபேறென்ன?

அன்பு, பண்பு, ஐக்கியம், நேசம்
அவனியிற் திகழப் பணிகளையாக்கி
என்றும் மனிதவுள்ளம் வாழ்வோம்
என்றயிலக்கே எம்மை வாழ்த்தும்!!!

-மருதூர் ஜமால்தீன், ஏறாவூர்-

# மூலிகை மருத்துவம்



06

கலாபூஷணம்
செல்லையா துரையப்பா

## ஆரோக்கியத்தைப் பேணும் அற்புத ஔடதமான கறிவேப்பிலை!

நமது உணவில் அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களுள் கறிவேப்பிலையும் ஒன்று. இது உணவின் வாசனையையும், ருசியையும் அதிகரிக்கவே பயன்படுத்தப்படுகிறது எனப் பலர் கருதுகின்றனர். இதனால்தான் உணவில் கிடக்கும் கறிவேப்பிலையை எடுத்து வீசி விடுகின்றனர். இனிமேல் அப்படிச் செய்யாதீர்கள். ஏனெனில் மூலிகை வகைகளில் கறிவேப்பிலை ஓர் அற்புதமான **"டானிக்" (Tonic)** என்று அழைக்கப்படுகிறது.

முறையா கோய்னிஜா (Murraya koeniga) என்ற தாவரப் பெயரைக் கொண்ட கறிவேப்பிலையில் உடல் ஆரோக்கியத்தைப் பேண அவசியமான விட்டமின் - ஏ, பி, சி, ஈயும் மற்றும் சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து, நார்ச்சத்து, பொஸ்பரஸ், மங்கனீசியம், மங்கனீஸ், மாச்சத்து, புரதம் போன்றவை அபரிதமாக அடங்கியுள்ளன. அதிக வெப்பத்தில் இச்சத்துக்கள் அழிவுறும் அபாயமுள்ளதால் இதைக் கறியை அடுப்பிலிருந்து இறக்கும்போதே போட வேண்டும்.

குழந்தைகள் முதல் வயோதிபர்கள், கர்ப்பிணிகள் வரை கறிவேப்பிலையை மருந்தாகப் பயன்படுத்தி நிவாரணம் பெறமுடியும். இதிலடங்கியுள்ள கோயினிஜாக், குளுகோசைட், ஒலியோ ரெசின், அஸ்பர் ஜான செரின், அயாமைன், புரோலைன், போன்ற அமினோ அமிலங்களே இதன் தனித்துவமான நறுமணத்தைத் தருகின்றன.



பல்வேறு ஆய்வுகள் மூலம் கறிவேப்பிலையின் அபூர்வ மருத்துவ வலிமை கண்டறியப்பட்டுள்ளது. நீரிழிவு நோய் ஏற்படாது தடுப்ப

தோடு, ஏற்பட்ட நோயையும் குணப்படுத்தும் அபாரதிறன் கறிவேப்பிலையில் உள்ளது. நீரிழிவு நோயாளரை அடிக்கடி தாக்கும் கிறுகிறுப்பு அகலத் துணை புரியும். கண்பார்வை குன்றல், சிறுநீரகச் செயலிழப்பு,இருதயநோய், அவயங்களை இழத்தல் போன்றவை ஏற்படாது பாதுகாக்கும். இரத்தத்தில் சீனியின் அளவை என்றும் சீரான அளவில் வைத்திருக்க உதவும்.தினமும் காலை 4 அல்லது 5 கறிவேப்பிலைகளை வாயிலிட்டு மென்று சாப்பிட நீரிழிவு எட்டியே பார்க்காது.

மொத்த கொலஸ்ரோல் (Total Cholestrol) , கெட்ட கொலஸ்ரோல் போன்றவை அதிகரிக்கும்போது இருதயநோய் ஏற்படும். இவை அதிகரிக்காமல் தடுத்தும் - அதிகரித்தால் குறைத்தும் இருதயநோய், மாரடைப்பு ஏற்படாது தடுக்கும் வல்லமை கறிவேப்பிலைக்கு உண்டு. ஆங்கில மருத்துவர்களால் இவற்றைக் குறைக்கக் கொடுக்கப்படும் ஸ்டடின் (Statin) போன்ற மருந்துகள் விலை அதிகமானதும், பாரிய பக்கவிளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடியவையுமாகும். மேலும் அதிகரித்த கொலஸ்ரோல் காரணமாக ஏற்படும் அதிகரித்த உடற்பருமன், உயர் இரத்த அழுத்தம் போன்றன பல்வேறு தொற்றா நோய்களைத் தோற்றுவிக்கும். கறிவேப்பிலை இவற்றைத் தடுக்கும்.

தற்போது சமையலுக்குப் பாவிக்கப்படும் பல்வேறு எண்ணெய் வகைகளில் கொலஸ்ரோல் அதிகமாக அடங்கியுள்ளது. இவ்வாறான எண்ணெயுடன் 15 -20 கறிவேப்பிலைகளைச் சேர்த்துக் கொதிக்க வைத்து, வடிகட்டி எடுக்கக் கணிசமானளவு கொலஸ்ரோல் குறையும். இதைக் கொண்டு பயமின்றிச் சமையல் செய்யலாம்.

முன்பு 60 வயதில் ஏற்படும் புற்றுநோய், இருதயநோய், நீரிழிவு போன்ற நோய்கள் தற்போது 10 வயது சிறார்களைத் தாக்குவதற்கு மூலகாரணி அவர்களால் விரும்பி உண்ணப்படும் துரித உணவு என்பது சில பெற்றோருக்குத் தெரியாது. இவ்வாறான உணவுகளில் எவ்வித ஊட்டச் சத்துக்களும் இல்லாமை, இவற்றில் அடங்கியுள்ள நச்சுத்தன்மை நிறைந்த சுவையூட்டிகள், நிறமூட்டிகள் போன்றன காரணமாகவே இளம் வயதில் நோய்கள் ஏற்படுவதோடு, இளநரையும் ஏற்படுகிறது. கறிவேப்பிலை இவ்வாறான பிரச்சினைகளைத் தடுக்கும். அத்தோடு கறிவேப்பிலை சேர்த்துக் காய்ச்சிய தேங்காய் எண்ணெயை தலையில் தடவிவர தலைமுடி கறுப்பாகும். அளவுக்கதிகமாக மதுபானம் அருந்துவதால் அது கல்லீரலைத் தாக்கி சிரோசில் (Cirrosis) என்ற நோயைத் தோற்றுவித்து உயிர்பிரிய வழிவகுக்கும்.



கர்ப்பம் தரித்த முதல்சில மாதங்களில் சில கர்ப்பிணிகள் மசக்கை என அழைக்கப்படும் உபாதையால் துன்பப்படுவர். அடிக்கடி வாந்தி, குமட்டல் போன்றவை ஏற்படும். இவ்வாறான உபாதைகளைக் கட்டுப் படுத்த கறிவேப்பிலை மரப்பட்டையை நீரில் காய்ச்சிப் பருக வாந்தி, குமட்டல், களைப்பு போன்றவை கட்டுப்படும். எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படாது.

புற்று நோயாளர்களுக்குக் கொடுக்கப்படும் கிமோதெரபி (Chemo therapy) மருந்து உடலைச் சுட்டு பாரிய பக்க விளைவுகளைத் தோற்றுவிக்கும். ஆனால் கறிவேப்பிலையுடன் சீரகம் போட்டு தயாரிக்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளப் புற்றுநோய் எம்மைத் தாக்காது எனச் சமீபத்திய ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கறிவேப்பிலை ஒரு சிறந்த கிருமிநாசினி ஆனபடியால் எச்.ஐ.வி போன்ற தொற்று நோய்கள் ஏற்படாது பாதுகாக்கும். அத்தோடு பாம்பு போன்ற விஷ ஜந்துகள் கடித்தால் கறிவேப்பிலையை அரைத்துப் பூசினால் விஷம் இறங்கும். மூட்டுவலி போன்ற உபாதைகளுக்கும் இது உதவும்.

நாட்டில் தற்போது தொற்றா நோய்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கு சோம்பல், சிக்கனம் காரணமாகச் சிலர் வீட்டில் சமையல் செய்யாது கடைகளில் தயாரிக்கப்படும் ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொள்வதே காரணமாகும். இச்செய்கையானது பிற்காலத்தில் இவர்களைத் தாக்கவிருக்கும் இருதயநோய், பக்கவாதம் போன்ற உயிர்க் கொல்லி நோய்கள் ஏற்பட இடப்படும் மூலதனம் என்பது இவர்களுக்குத் தெரியாது. எனவே கறிவேப்பிலை போட்டு வீட்டில் சமைத்த உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியத்தைப் பேணுவோமாக!

# சுகம் தருவது



கனவுகளின் சுகத்தை
காலைகள் தருவதில்லை.
நினைவுகளின் சுகத்தை
நிஜங்கள் தருவதில்லை.
வாலிபத்தின் சுகத்தை
வயோதிபம் தருவதில்லை.
துணையின் சுகத்தை
தனிமை தருவதில்லை.
இன்பத்தின் சுகத்தை
துன்பங்கள் தருவதில்லை.
உதயத்தின் சுகத்தை
மறைவுகள் தருவதில்லை.
இதயத்தின் சுகத்தை
இருப்பவர் நினைப்பதில்லை!

-வாசுகி துரைத்தினம், அமிர்தகழி -

# வெல்வாய் நீ!

சாவே நில், வாராதே!
சற்றே பொறுத்தே வா!
நோவேதும் இல்லாமல்
நுண்ணுயிரைக் கொண்டேகு!
ஏனென்று கேட்டாயா?
இனியமொழி ஒன்றுண்டே!
தேனென்ற - பாலென்ற
செம்மொழியாம் நந்தமிழை
இன்று வரையும் கற்றும்
இன்னும் முடியவில்லை!
நன்றதனை முற்றாக
நான் கற்று முடிவடைய
வந்தால் உனக்குரிய
வரவேற்பை நான் தருவேன்!
எந்தவித நோக்காடும்
இல்லாதுயிரை எடு!
சற்றிருந்து கலவாத
தமிழை - இசைப் பாவைக்
கற்றறிந்து கண்டாயேல்
கட்டாயம் என்னுடனே
போட்டியிட்டுச் வெல்வாய் நீ
போகாய் யமலோகம்
பாட்டுக்களில் உள்ளம்
பறிகொடுத்தே கிடப்பாய்!
பொய்யல்ல உண்மை இது?
பொறுத்திங்கு வந்தே பார்!!!
ஐயமே கிடையா தறி!

-தாமரைத் தீவான், ஈச்சந்தீவு, கிண்ணியா-

# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

- ஆ.மு.சி.வேலழகன் -

16

## உ. நிரையொன்றாசிரியத் தளை

**நி**ரையசை ஆசிரியச்சீர், நிரையசை முதலாய் வருஞ்சீருடன் சேர்தற் கண் உளதாகுந்தளை நிரையொன்றாசிரியத் தளையாகும். கூவிளம், கருவிளம் எனும் சீர்களுக்கு முன்னே நிரையசை வருதலே நிரையொன் றாசிரியத் தளையாகும்.

(எ- கா)

**"அணி (நிழல் அசோ) (கமலர்ந் தருள்) (நெறி நடத்) திய**
நிரை நிரை நிரை நிரை நிரை நிரை நிரை நிரை

இந்த ஆசிரியத்தளையிலே, அதாவது நிரையொன்றாசிரியத் தளையிலே அனைத்துச் சீர்களும் நிரையாகவே வந்துள்ளன. மேலும் :-

**"அணி (நிழல் அசோக) (கமலர்ந் தருள்) (நெறி நடாத்) திய**
நிரை நிரை நிரை நிரை நிரை நிரை நிரை நிரை
**மணி (திகழ் அவி) (ரொளி வர) (தனைப்**
நிரை நிரை நிரை நிரை நிரை நிரை
**பணி (பவர் பவம்) (நனி பரி) (சறுப் பவ) ரே**
நிரை நிரை நிரை நிரை நிரை நிரை நிரை நிரை

இந்த மூன்று அடிகளில் வரும் நிரையொன்றாசிரியத் தளையில் **"அணி"** என்பது ஓர் அசை. இந்த அசை நிரையசை எனப்படும். எனவே இதனையடுத்து வருவது **"நிழல்"** எனும் அசை. இதுவும் நிரையசையே. இந்த **"அணிநிழல்"** எனும் சீரில் இரு அசைகள் வருவதைப் பார்த்தோ மல்லவா? இதேபோல் ஏனைய சீர்களிலும் இரு - இரு அசைகள் தான் வந்துள்ளன. வந்த இந்த இரு அசைச் சீர்கள் அனைத்தும் நிரையசையில் வந்த சீர்கள்தான்.

இதிலே நாம் கவனிக்க வேண்டிய விடயம் ஒரு அடியில் முதல் சீரில் தொடங்கும் அசை நிரையசையாகும். அதனை அடுத்து வரும் அசையும் நிரையசைதான். இதனாலேயே இதனை நிரையொன்றி வந்த ஆசிரியத்தளை என்கின்றனர்.

## 3. வெண்சீர் வெண்டளை

இந்த வெண்சீர் வெண்டளை எனும் தளையில் தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் எனும் வெண்பாவிற்குரிய காய்ச்சீர்களுக்கு முன்னே நேர்அசை வருதலே வெண்சீர் வெண்டளையாகும்.

(எ- கா) **"யா தா (னும் நா) டா (மால் ஊ) ரா (மால் என்) னொருவன்**

நேர் நேர் நேர் நேர் நேர் நேர் நேர் நேர்

**சாந் துணை (யும் கல்) லா (த வா) று**

இங்கே இறுதிச்சீர் தவிர மற்றெல்லாச் சீர்களும் மூவகைச் சீர்களாக வந்துள்ளன. இக் குறள் வெண்பா முழுவதும் வெண்சீர் வெண்டளை கொள்ளுமாறு சீர்கள் எல்லாம் வெண்சீர்களாய் ஒன்றிவந்துள்ளன. வெண்சீர் என்பது வெண்பாவுக்குரிய காய்ச்சீர்களாகும். ஈரசையோடு நேர் சேரின் காய் என்பது வரும்.

நேர் நேர் நேர் = தேமாங்காய்
நிரை நேர் நேர்= புளிமாங்காய்
நேர் நிரை நேர் = கூவிளங்காய்
நிரை நிரை நேர் = கருவிளங்காய்

இங்கே காட்டப்பட்ட நான்கு வாய்ப்பாட்டிலும் மூவசைகள் கொண்ட சீர்களின் இறுதியில் வந்த அசைகள் அனைத்தும் நேர், நேர், நேர் - தேமாங்காய், காய்முன் **"நா"** என்றும் நேரசை வந்தது.

## 4. இயற்சீர் வெண்டளை

இயற்சீர் வெண்டளைக்கு தேமா, புளிமா என்னும் சீர்களுக்கு முன்னே நிரையும், கூவிளம், கருவிளம் என்னும் சீர்களுக்கு முன்னே நேரும் வருதலையே இயற்சீர் வெண்டளை என்பர். சுருக்கமாகச் சொல்வதானால் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருதல் இயற்சீர் வெண்டளை எனலாம்.

(எ-கா) **"இளை யான் அடக்கம் :** அடக்கம் கிளை + பொருள்
நிரை நேர் நிரை நேர் நிரை நேர் நிரை + நிரை
**இல் லான் கொடையே கொடைப் பயன் - எல்லாம்**
நேர் நேர் நிரை நேர் நிரை நிரை நேர் நேர்
**ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்**
நிரை நேர் நிரை நேர் நிரை நிரை நேர் நேர்
**பொறுக்கும் பொறைமே ய பொறை" - நாலடியார் -**
நிரை நேர் நிரை நேர் நேர் நேர்

இந்த ஈரசைச் சீர்களான தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் ஆகிய சீர்கள் அகவற்பாவிற்கே உரியனவாகும். எனவே இந்த ஈரசைச் சீர்களை **"அகவற்சீர்"** என்பர். அத்தோடு **"ஆசிரியப்பா"** , **"ஆசிரிய உரிச்சீர்"**, **"இயற்சீர்"** என்றும் கூறுவர்.

### ௫. ஒன்றிய வஞ்சித்தளை

இந்த ஒன்றிய வஞ்சித் தளையானது கனிச்சீருக்கு முன் நிரையசை வருதலே ஒன்றிய வஞ்சித்தளையாகும்.

(எ- கா) **"வினைத் திண் பகை விழச் செற்றவன்**
நிரை நேர் நிரை நிரை நேர் நிரை
**வனப் பங்கய மலர்த் தாளினை"**
நிரை நேர் நிரை நிரை நிரை நேர்

இங்கே ஒன்றிய வஞ்சித்தளை வந்திருத்தலைக் காணலாம். புளி மாங்கனிக்கு முன் **"விழச்"** என்று நிரையசை வந்துள்ளது. அதாவது கனிச்சீருக்கு நிரை வருதலே ஒன்றிய வஞ்சித்தளையாகும்.

(தொடரும்....)

## முகப்பில்...

**எ**மது மட்டு.நகரின் மைந்தனான பரதநாட்டிய மற்றும் கூச்சுப்புடி கலைஞர் தவராஜா மோகனப்பிரியனின் பரதநாட்டிய நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு தேவநாயகம் கலையரங்கில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் இடம்பெற்ற நாட்டியத்தையே படத்தில் காணலாம்.

இந்நிகழ்வில் கல்வியியலாளர்கள், இலக்கிய வாதிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக் கானோர் கலந்து கொண்டனர். இவருக்குத் **"தென்றல்"** தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# படமும் – பதிவும்

- ரவிப்ரியா -



திருப்பழுகாமத்தைச் சேர்ந்த சோமசூரியம் திருமாறன் நுளம்பைக் கட்டுப்படுத்தும் நுளம்புப் பொறியொன்றைத் தயாரித்துள்ளார். அவர் இது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சாள்சுக்கு விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.




மட்டக்களப்பு மாநகரசபை நடத்திய விருது வழங்கும் நிகழ்வு மாநகர மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாநகர முதல்வர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன் பெண்மணியொருவருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடத்திய 48 ஆவது உலகத் தொடர்பு தினவிழா மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள் தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை நாடகம், கலை, இலக்கியம் ஆகிய துறைகளுக்குப் பங்களிப்புச் செய்து வரும் அருட்தந்தை யோசப் மேரிக்குப் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



கல்வியமைச்சினால் கஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் இலவசப் பாதணி வழங்கும் வைபவம் அண்மையில் பழுகாமம் விபுலானந்த வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பட்டிருப்பு வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி டே. இராஜகுமாரன் பாதணிகளை மாணவரொருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.





திருப்பழுகாமம் பஞ்சாலி கலைக்கழகம் நடாத்திய கவிஞர் கலாபூஷணம் ஆ.மு.சி. வேலழகனின் **"சந்தனக்காடு"**-(கவிதைநூல் ) வெளியீடும், **"வள்ளுவன் சொல்லே வாழும் நெறி"**–(ஆய்வு), **"உள்ளத்தனைய உயர்வு"** (நாவல்),**"தொன்மைமிகு திராவிடர் நாகரீகம்** (ஆய்வு) ஆகிய நூல்களின் அறிமுக விழாவும் கண்டுமணி மகாவித்தியாலய கேட் போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கண்டுமணி மகா வித்தியாலய அதிபர் சு.உதயகுமார் நூல்களின் முதற்பிரதியை போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் ந.வில்வரெத்தினத்துக்கு வழங்குவதையும், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஆ.பிரபாகரன் நூல்களின் சிறப்புப்பிரதிகளை **"தென்றல்"** சஞ்சிகை ஆசிரியர் க.கிருபாகரனுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.



மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் எழுதிய **"தமிழன் தமிழனாக"** எனும் கவிதை நூலின் அறிமுகவிழா புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூலாசிரியர் நூலின் சிறப்புப் பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் பழச்செய்கையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் காத்தான்குடி விவசாயப் போதனாசிரியர் திருமதி குந்தவை ரவிசங்கர் **"டொம் ஜோசி"** என்ற புதிய மாமரக் கன்றை காத்தான்குடி பிரதேசப் பயனாளி ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



களுதாவளை வட்டிக் குளக்கட்டு அத்தியடி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையினரும், உதயதாரகை மன்றத்தினரும் இணைந்து நடத்திய பாராட்டு நிகழ்வில் கவிஞர் இரா. நல்லையா **"வீசுதென்றல்"** விருது பெற்ற **"தென்றல்"** ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ஆ.அரசரெத்தினத்துக்குப் பொன்னாடை போர்த்தி, பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



**"மொழிதல்"** ஆய்வு நூலின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு விபுலானந்தா அழகியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலாநிதி சி.சந்திரசேகரம் நூலின் சிறப்புப் பிரதியை தொல்லியல் ஆய்வாளர் க.தங்கேஸ்வரிக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.





கண்ணகி இலக்கியக் கூடலினால் ஏற்பாடு செய்யப்பட்ட 4ஆவது கண்ணகி கலை இலக்கிய விழா திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள தம்பிலுவில் மத்திய மகாவித்தி யாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கூடலின் தலைவர் த.கோபாலகிருஷ்ணன் விழா மலரான **"கூடல்" (பரல் -3)** இன் முதற்பிரதியை வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆராய்ச்சி உதவியாளர் சி.இருதயகாந்தனிடம் வழங்குவதையும். விழாக் குழுவினருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




- **Dr.K.அருளானந்தம்** (MBBS, D,F,M)
விரிவுரையாளர், சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். -

உண்மையான **"Teen Age"** பருவத்துக்கு உரியவர்களாக தங்களை இனங்காட்டத் தொடங்குவதுடன், தங்களுக்கான சிறப்புக் குணாங்களையும் வெளிக் காட்டுவர். நாகரீக உலகில் மிகவிரைவாகவும், கவர்ச்சியாகவும் விளம்பரப்படுத்தக் கூடிய அனைத்து நிகழ்ச்சி நிரல்களையும் தேடிச் செல்வர். அடிக்கடி தங்களது உணர்வுகளையும், கூட்டுக்களையும், நடமாடும் இடங்களையும் மாற்ற முனைவர். துரதிஷ்டவசமாக தாங்கள் கூட்டுச் சேர்கின்ற நண்ப – நண்பிகளினூடாக மிக மோசமான எதிர்காலத்தையும் தோற்றுவிக்கக் கூடிய வாய்ப்புண்டு.

பொருளாதாரத்தை உணராதவர்களாகவும், கூடியளவில் உற்பத்தி செய்ய முடியாதவர்களாகவும் இருப்பதோடு பொருளாதாரத்தை இலகுவில் வீண டிக்கக் கூடியவர்கள். தங்களுக்கென ஒரு சிறப்புப் பாணியைத் தேர்ந்தெடுத்து, அதைச் சரியென விவாதித்து காரியங்களைச் செயற்படுத்துவர். மாறாக ஒரு சாரார் கலை, கலாசார, இலக்கியங்களில் தங்களை இணைத்துக் கொள்வர்.

பொதுவாகத் தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் இவர்களை அணுகுவது குறைவாதலால் சிறந்த உடல் நலத்தைப் பேணுவர். ஆனால் விபத்துக்கள் (வாகனம்), சமூகச் சீரழிவுகள்ஏற்படுவதோடு – சில வேளைகளில் தற்கொலைகள் கூட ஏற்பட வாய்ப்புண்டு.



சமூகப் போட்டிகளை முன்னறிவு எதுவுமின்றி எதேச்சையாக எதிர் கொள்வர். பாலியலில் மிக அதிகளவு ஆர்வம் இருந்தும், அவற்றைத் துணிந்து கையாளமாட்டார்கள். ஆனால் துரதிஷ்ட வசமான சூழ்நிலைகள் அமையும் போது பாலியல் தொடர்புகள் மிக மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துவதையும் நாம் அன்றாடம் கண்டு கொண்டிருக்கிறோம். இக்காலகட்டத்தில் திரைப்படங்கள் இவர்களை இலகுவில் கவர்ந்து கொள்ளும். இதனால் குடும்பத்திற்கு – சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளில் இறங்க முற்படுவார்கள். ஆடம்பரமான ஆடைகளை அணிவதிலும், தங்களை அலங்கரிப்பதிலும் அதிக நேரத்தைச் செலவழிக்கும் இவர்கள் பொதுவாக ஆரோக்கிய நிகழ்ச்சி நிரலை வைத்துக் கொள்ளமாட்டார்கள். கல்வி நிலையிலும் இடைநிலைக் காலமாதலால் பரீட்சை முடிவுகள் அவர்களை மிக இலகுவாக வெவ்வேறு திசைப்படுத்தி விடும்.

துறைசார்- துறைசாரா கற்கை நெறிகளைக் கற்பார்கள். தங்களுக்குரிய சரியான கற்கை நெறிகளைத் தீர்மானிப்பதிலும் சிக்கலை எதிர்கொள்வார்கள். இந்நிலையில் அவர்களுக்குச் சரியான- பொருத்தமான வழிகாட்டல்கள் அவசியமாகிறது. காரணம் தீர்க்கமான பாதைக்குரிய வரைபை (Road map) தங்களுக்குள் தீட்டியவர்கள் மட்டுமே மிகவும் உற்சாகமாகவும் - தடைகளை நீக்கிச் சவால்களை வெற்றி கொள்ளக் கூடியவர்களாகவும் மாறுவதுடன் - தங்களுக்கான சிறப்பான இடத்தையும் அடைவார்கள். இக்காலகட்டத்தில் தங்களுக்குரிய குடும்பம், பெற்றோர், தான் கல்வி கற்ற பாடசாலை, கற்பித்த ஆசிரியர்கள், ஒன்றாகக் கூடித் திரிந்த நண்பர்கள் போன்ற காரணிகள் அதிகளவு ஆதிக்கம் செலுத்தும்.

இந்த வயதில் ஆண் பிள்ளைகளினதும் - பெண் பிள்ளைகளினதும் நடவடிக்கைகளில் வேறுபாடுகள் காணப்படும். குறிப்பாக உடல் கட்டமைப்பிலும், உடற் தொழிற்பாடுகளிலும் அதிக மாற்றம் தென்படும். வயதொத்த மாற்றங்கள் வேறுபட்டுக் காணப்படுவதோடு, சமூக ரீதியாக இவர்களுக்கான அந்தஸ்தும் வேறுபடும்.

**(தொடரும்....)**

சிறுகதை



# கால்

கஜவாஞ்சியூர் அனோஜா பவனேந்திரன்

இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதம். நான் ஒரு விதம்; நீ ஒரு விதம்; அவன் ஒரு விதம்; அவள் ஒரு விதம்; அவர் ஒரு விதம்.

ஆம், என்றும் போல் இன்றும் கோட்டைப் புகையிரத நிலையம் ஆரவாரமாய் இயங்கிக் கொண்டிருக்கிறது. நான் ஆசன முற்பதிவுக்காய் சென்று ஏமாந்த நிலையில் நிற்கிறேன். நான் பயணிக்க வேண்டிய புகைவண்டி செல்வதற்கு நேரம் இருப்பதனால் கடைத் தெருவைச் சுற்றிப் பார்ப்பதற்கு தயாராகுகின்றேன்.

அடுத்தடுத்து செல்லும் புகைவண்டியின் இரைச்சல். நிஷப்த சூழலை அங்கே காணமுடியாது. என்பதை நினைவூட்டிக் கொண்டே இருந்தது. இந்த இரைச்சலுடன் போட்டி போட்டுக் கொள்ளும் வகையில் கூவி விற்கும் வியாபாரிகள் அங்கே **“வடே.. வடே....”**, **“கிரி காப்பி ....”**, **“பிளேன் காப்பி....”**, **“சோளம் ...சோளம்...”**. இவற்றுக்கிடையில் அவ்வப்போது ஐஸ்கிறீம் காரரின் **“பாப்பூ.... பாப்பூ.....”** ஓசை. இவற்றுடன் தங்கள் காரியங்களைச் சரியாகச் செய்வதுடன் நிற்பவர்களைப் புதினம் பார்க்கும் சனக்கூட்டம். இவற்றையெல்லாம் தாண்டி நான் வீதிக்கு வருகிறேன்.

தங்கள் பொருட்களை விற்பனை செய்யும் நோக்குடன் செல்பவர்களை **"வாங்க..வாங்க...."** என்று அழைக்கும் கடைவியாபாரிகளைக் கடந்து செல்லுகையில் ஒருவர் அழகான செருப்பிட்டு அலங்கரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கால் ஒன்றினை தன் கையில் ஏந்திய வண்ணம்.

**"மொனிக்கா உன் கால் கிடைச்சிற்று; மொனிக்கா இந்தாரிக்கு உன் கால்; உன் கால நான் கண்டு பிடிச்சிற்றன் மொனிக்கா; எங்க இருந்தாலும் வா...."**. என்று தன் பாட்டிற்கு சத்தமாகக் கதைத்துக் கொண்டு அந்தக் காலை வெறித்து வெறித்துப் பார்த்து ஆனந்தக் கூத்தாடி ஆரவாரப் பட்டுக் கொள்கிறான். அவனது செயற்பாடு மற்றவர்களிடமிருந்து மாற்றமுற்று இருந்தமையினால் வருகின்றவர்கள் போகின்றவர்கள் எல்லோரும் ஏளனமாய் பார்த்துக் கொண்டிருக்கையில் அடுத்து நடந்த சம்பவம் எல்லோரையும் உருக்கி விட்டது.

ஊன்று தடியை உதவியாகக் கொண்ட வண்ணம் ஒரு முதுமனிதர்- **"என் கால்; அத வாங்கித் தாங்க..."** என்று அவனைப் பின் தொடர்ந்து அவனை அணுக முடியாது அவதியுறுகிறார். அதற்கிடையில் வீதியிற் சென்ற சிலர் காலைத் தூக்கிச் சென்றவனைப் பிடித்து காலை அந்த முதியவரிடம் வாங்கிக் கொடுக்கின்றனர்.

ஆம், காலைத் தூக்கிச் சென்ற அவன் ஒரு விதம்; பொல்லூன்றிய முதுமனிதன் ஒரு விதம்; காலைக் கைப்பற்றியவர்கள் ஒரு விதம்; காலைக் கைப்பற்ற முனைந்தவர்கள் ஒரு விதம்; நடந்ததைக் கண்டும் காணாமல் சென்றவர்கள் ஒரு விதம்; நடந்தது எதுவுமே தெரியாமல் வீதியால் சென்றவர்கள் ஒரு விதம். எல்லோரும் இறைவனின் படைப்புக்கள். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம்.

நடந்தவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு நின்ற எனக்குப் பக்கத்துக் கடைக்காரன் சொன்னார்- **"இது ஒன்றும் புதிதில்லை எங்களுக்கு. இவர் பலமுறை இப்படிச் செய்து விட்டார்"** என்றார்.

**"ஏன் இப்படி"** என்று தொடர்ந்து கேட்டேன் நான். **"இவரோட பெயர் சந்திரன். இவர் மொனிக்கா என்கிற பெண்ணக் காதலிச்சார். அஞ்சி வருஷத்துக்கு முதல் வஸ்ஸில நடந்த குண்டு வெடிப்பில மொனிக்கா காலை இழந்திட்டாவு. தன்னோட நிலைமைய இயலாமையா எண்ணி தற்கொலை செஞ்சிற்றா. இந்த சம்பவத்துக்குப் பிறகு இவன் பித்துப் பிடிச்சவனாகிட்டான். அந்த ராஜா ஐயாவுக்கும் அந்தச் சம்பவத்தில தான் கால் போயிற்று"**.

இனம், மதம், மொழி கடந்து வந்த சந்திரன் - மொனிக்காவின் உண்மைக் காதல் இன்று இப்படியாகி விட்டது. இனம், மதம், மொழி, வயது கடந்து காதல் மட்டுமா வந்தது. அந்தக் குண்டு வெடிப்பின் இழப்புமல்லவா நேர்ந்து விட்டது.

இயற்கை வளம் நிறைந்த இரத்தின பூமியில் இன்னும் எத்தனை – எத்தனையோ மொனிக்கா – சந்திரன், ராஜா நிறைந்துதான் இருக்கிறார்கள். இந்தப் பரம்பரை அழியும்வரை இது போன்ற எத்தனையோ சோகச் சுவடுகள் எம்மை விட்டு அழியாது என்பதை நான் புரிந்து கொண்டிருக்கையில் நான் பயணிக்க வேண்டிய புகைவண்டியின் ஒலிபெருக்கி அழைப்புக் கேட்டு ஓடி வந்து புகைவண்டியில் ஏறிக் கொள்கிறேன்.

(யாவும் கற்பனை)

# இவர்களைத் தென்றல் வாழ்த்துகிறது!!!



திருகோணமலையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண மட்டத்திலான உற்பத்தித்திறன் **"விஷேட விருது – 2013"** இல் கோறளைப்பற்று – வடக்கு (வாகரை) பிரதேசசபை **"விஷேட புகழாரம்"** விருதினைப் பெற்றுக் கொண்டது.

- பேராசிரியர். செ. யோகராசா-

# கவனிக்கப்படாத கவனிக்கப்படவேண்டிய புலவர்கள் -3-

## கோளாவில் மொட்டை வேலாப் போடியார்

மொட்டை வேலாப் போடியார் அக்கரைப்பற்றுப் பிரதேசம் சார்ந்த கோளாவில் என்ற ஊரிலே பிறந்தவர். இவரது இயற்பெயர் வேலன் என்றும்; மரியாதை காரணமாக **"வேலாப் போடியார்"** என்றும்; தலைமயிர் உதிர்ந்து வழுக்கையான நிலையில் **"மொட்டை வேலாப் போடியார்"** என்று அழைக்கப்பட்டார் என்றும்; இவரது தந்தையார் பெயர் சின்னத்தம்பி என்றும்; தாயார் பெயர் கெங்காத்தை என்றும் அறியப்படுகிறது. 1804 இல் இவர் பிறந்தாரென்றும்; 1880 இல் இவர் மறைந்தாரென்றும் கருதப்படுகின்றார். இத்தகவல் சரியெனில், நாம் கவனித்து வருகின்ற மேற்கூறிய வாய்மொழிப் பாடல் மரபில் வந்தோருள் காலத்தால் முற்பட்டவராக இவரையே கருத முடியும்.

மொட்டை வேலாப் போடியார் தனிப்பாடல்கள் பல பாடியிருப்பது மட்டுமன்றி, இவ்வாய்மொழி மரபு சார்ந்த பள்ளு, காவியம், அம்மானை முதலான வடிவங்களில் சிலவற்றையும் பாடியுள்ளார்-என்பதும் கவனத்திற்குரியது.

இவரது தனிப்பாடல்களுள் **"அறம் பாடுதல்"** மரபு சார்ந்த பாடல்களும் அடங்குகின்றன. (இவ்வகைப் பாடல்கள் பாடப்பட்டால் பாடலுக்குரியவர் இறந்து விடுவார் என்றொரு நம்பிக்கையுண்டு). இவ்விதத்தில் நன்கு பிரசித்தமான பாடலொன்றுள்ளது. அது பின்வருமாறமைகிறது.

**"முத்தர் பாண்டியர் மூவர் இருக்கின்ற**
**மத்தியான மருத நிழல் தனைக்**

**கத்தி கொண்டதன் கந்தற வெட்டினான்**
**கத்தி வேலவன் தலையற வெட்டுவாய்"**

மேற்கூறிய பாடல் பாடப்பட்டமை தொடர்பான வாய்மொழிக் கதை யொன்று உள்ளது. அதை இங்கு குறிப்பிடுவது அவசியமானது. தமது ஓய்வு நேரங்களின்போது மருதமர நிழலின் கீழமர்ந்து நண்பர்களோடு உரையாடுவது புலவரின் வழக்கமாம். இது கண்டு பொறாமை கொண்ட ஊரிலுள்ள செல்வந்த ரொருவர் அவ்வாறமர்ந்து உரையாடுகின்ற மருதமரக் கிளைகளை வெட்டச் செய்தாராம். அது கண்டு புலவர் ஆத்திரமும், கவலையும் கொண்டு மேற்குறிப்பிட்ட பாடலைப் பாடினராம். அவற்றை வெட்டிய கூலியாள் அந்திநேரத்தில் மாடுகளை மேய்த்துத் திரும்புகின்ற வேளையின் போது மயங்கி விழுந்து இறந்து விட்டாராம்! - இதுவே மேலுள்ள பாடல் பிறந்த கதையாகும்! - இக்கதை உண்மையெனில் மேற்கூறிய பாடலை **"அறம் பாடும் மரபு"** சார்ந்த பாடலாகக் கொள்ளலாம் என்பதில் சந்தேகமில்லை.

மொட்டை வேலாப் போடியார் பாடியதாகக் கருதப்படுகின்ற பாடல்களுள் தம்பிலுவில் பள்ளுமொன்று. [வாய்மொழி மரபு சார்ந்த இத்தகைய பள்ளுப் பாடல் வகைக்கும் - எழுத்து மரபு சார்ந்த பள்ளுப்பாடல் வகைக்கும் (உ+ம்:- முக்கூடற் பள்ளு) எத்தகைய தொடர்புமில்லை- என்பதை இவ்வேளை நினைவு கூர்வது அவசியம்.] பின்வரும் பாடல் இப்பள்ளுவில் இடம்பெற்றுள்ளது.

**"காதறுந்த வேதனைக்குப் பால் கறந்து உண்ண வென்று**
**காரிகையாள் மாடு, கன்று தான் கொடுத்தாளாம்**
**காதறுந்து நாவரண்டு காமவிடாயால் மெலிந்து**
**காட்டகத்திற் பேயது போல் ஓடலுற்றனாம்"**

மேற்கூறிய பாடலும் ஊரில் நடந்த சம்பவமொன்றுடன் தொடர்பு பட்டுள்ளதாகக் கருதுவர். அதாவது தம்பிலுவில் என்ற ஊரில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலை பார்த்து வந்த ஊழியரொருவர் அவ்வூரிலுள்ள பெண்ணொருத்தியுடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும், அதையறிந்த ஊரவர் அவ்வூழியரின் காதினை வெட்டிவிட்டதாகவும், அதன் பின் அவர் அவ்வூரினை விட்டு வெளியேறி விட்டதாகவும், வேறூர் சென்ற அவர் மீது இரங்கிக் குறிப்பிட்ட பெண் பசு மாடொன்றினை அவருக்கு அனுப்பி வைத்ததாகவும் அக்கதை வழங்கி வருகிறது.

மேற்கூறிய வகைப் பாடல்கள் தவிர, ஊர்க் கோவில்கள் மீது பாடல்கள் பாடுகின்ற வழக்கமும் புலவருக்கிருந்தது. வழமை போன்று இவ்வாறான பாடல்களும் மறைந்து விட்ட அவப்பேறான சூழலில் கதிர்காமம் மீது பாடப்பட்ட பதிகமொன்றில் இடம்பெற்றுள்ள பின்வரும் பாடலொன்று மாதிரிக்காக இங்கு தரப்படுகிறது.

"ஊரிலுள்ள பேர்களெல்லாம் வளைத்திருக்க
ஓடுகின்ற பிரணவந்தான் ஓங்கி நிற்க
சாடுகின்ற எமதூதர் தலைமேல் நிற்கத்
தனை மறந்து எனதுயிர்தான் சாகும் போது
ஆதி என்ற அட்சரத்துள் அடங்கி நின்ற
ஆறுமுகனே வந்தெனக்கு அபயந்தா தா
தேடிவந்துன் கதிரைமலை தன்னில் வாழும்
சுவாமி சிவன் மகனே உனை நாளும் தெரிசிப்பேன்"

மொட்டை வேலாப் போடியார் பாடியதாகக் கருதப்படும் நெடும் பாடலொன்றின் ஒரு பகுதியும் கிடைத்துள்ளது. அதையும் இங்கு தருவது பயனுடையது.

"செம்பவ ளப்பொருள் திங்கள் முகத்துதி
தேன்மொழி யாளுடைய — நல்ல
கும்பமு லைக்கிணை வெங்கடக் கரிக்
கோடென ஓதிடலாம் !
ஆசை மிகுந்த என் நேசம் சிறந்த பெண்
ஆடா வப்பதுமை — நல்ல
மோகந் தணிந்த என் நேசம் மிகுந்த நல்
முலையில் தேமலுமாம்
தங்கத் தகடும் குவளைக் குலையும்
சரிந்த இனமுலையாள் - அந்த
மங்கைக் கொருவர் வடுவுகள் சொல்ல
மனதில் முடியாதாம்
மின்னற் கொடியிடை கன்னித் திருவுரு
மெல்லிநல் லாளுடைய — அந்த
வண்ணத் தொடைக்கிணை கன்னிச் சினையின்
வரால்என ஒப்பிடலாம்
பச்சை நரம்பும் வெண் பால் முலைக் கோடும்
பசும்பொன் னரத்தொடையும்
அச்ச மில்லாததோர் நெஞ்சுமுடைய
அரிவையும் வந்தனளாம்
பாலைப் பழித்த சொல்லாளைச் சிறந்த
பதியில் மணம் முடித்து
வேலப்பர் தன் திருக்கோயிலிற் பூசை
விரும்பி நடத்தினராம்"

(தொடர்ச்சி 41ம் பக்கம்...)







நூல் : **சந்தனக்காடு**
**கவிஞர் ஆ.மு.சி . வேலழகனின் பவளவிழாச் சிறப்பு மலர்**

**தொகுப்பாசிரியர் : எஸ்.ஏ.ஸ்ரீதர்**

**வெளியீடு :- வாழைச்சேனை தமிழ் கலை, இலக்கிய மன்றம்.**

**விலை:- ரூபாய் 250**

**இ**ந்நூல் கவிஞர் ஆ.மு.சி . வேலழகனின் 75 ஆவது பிறந்ததினத்தை ஒட்டிப் பவளவிழாச் சிறப்பு மலராக 37 கவிஞர்களின் வாழ்த்துக் கவிதைகளைத் தாங்கி முழுப் பிரசவமாக வெளி வந்துள்ளது. பவளவிழா நாயகனைத் **"தென்றலும்"** பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறது.



**இறுவட்டு : ஸ்ரீ பரமநயினார் ஐயனார் பாடல்கள்**
**: புல்லுமலை ஸ்ரீ நாககன்னி பாடல்கள்**

**பாடலாக்கமும்**
**தயாரிப்பும் : ஆரையூர் அருள்**

**இ**வ் இறுவட்டில் இறைவனின் புகழ்பாடும் பாடல்கள் நம்மவர் தயாரிப்பில், இசையில், குரலில், ஒலிப்பதிவில் மேற்படி இரு ஆலய உற்சவங்களின் போதும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எமது புகழ்பூத்த கவிஞரான ஆரையூர் அருளின் 21 ஆவது, 22 ஆவது வெளியீடுகளாக இவ்இறுவட்டுக்கள் முழுப்பிரசவமாக வெளிவந்துள்ளது. இவ்விதம் இசை வடிவங்களை ஆவணப்படுத்தும் செயற்பாடுகள் எமது மட்டு. மண்ணில் தொடர்வது பாராட்டுக்குரியது.

# இலக்கிய நயம்



சீதாப்பிராட்டியார் இராவணனால் கவர்ந்து வரப்பட்டு அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டாள். அவள் புலிக் கூட்டத்தினிடத்தே அகப்பட்ட புள்ளி மான் போல — கையில் வாளேந்திய அரக்கியர் காவல் புரிய பகலில் எரியும் விளக்கைப் போல் ஒளியிழந்த மெய்யளாய், அங்கம் மெலிந்து, இரவும் - பகலும் துயிலின்றி பிரிவெனும் பிணியால் வழிமேல் விழிவைத்து இராமபிரானின் வரவை எதிர்பார்த்து அவர் வராமையால் கண்ணீர் ஆறாகப் பெருக... விழுதல், விம்முதல், இரங்குதல், இராமனையே எண்ணித் திசை நோக்கித் தொழுதல், சோருதல், நடுங்குதல், அழுதலின்றி மற்றொன்றும் அறியாதாளாய் இருந்த இடத்தை விட்டு எழுதலின்றி இருந்தாள் சீதாப்பிராட்டியார்.

தன் நாயகன் வராமையையிட்டு பற்பலவாறு எண்ணி ஏங்கினாள். அவருக்கு அரக்கர்களுடன் நிகழ்ந்த போரினால் ஏதும் ஆபத்து ஏற்பட்டதோ? என்று துயருற்றாள். கரனைக் கொன்றமையை எண்ணி - அவ்வாறு ஒன்றும் நிகழவில்லை என்று மனம் தேறுவாள்.

இவ்வேளையில் காவலில் இருந்த அரக்கியர் துயில் கொண்டனர். சீதாப்பிராட்டியார் விபீடணன் மகள் திருசடையை நோக்கி **"என் இடக்கண் துடிக்கிறது. வருவது என்னவென்று அறியேன்"** என்றாள். அதற்குத் திருசடை **"இது நன்று. நின் செவியில் மெல்லென ஒரு வண்டு வந்து ஊதிச் சென்றது. எனவே உன் கணவன் அனுப்பிய தூதன் வருவது உண்மை. தீயவர் அழிவது திண்ணம்".** என்று தான் கண்ட ஒரு கனவைப் பிராட்டிக்கு எடுத்துரைத்தாள்.

திருசடை பிராட்டியைத் தேற்றி **"யான் கண்ட அக்கனவு முடிவுறாது நீ என்னைத் துயில் எழுப்பி விட்டாய்!"** என்றாள்.

அதற்குச் சீதை **"நீ மீண்டும் தூங்கி அக்கனவின் பலனை எனக்குக் கூறுக!"** என்றாள்.

அப்போது இராம தூதரான அனுமன் அசோகவனத்தின் பல பகுதிகளையும் பார்த்துக் கொண்டு, சீதையிருந்த சூழலைக் கண்டான். அனுமன் வந்த சமயம் காவலரக்கியர்கள் திடீரென விழித்தெழுந்து கொடிய ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு சீதையைச் சூழ்ந்து கொண்டனர். சீதை அரக்கியர் செயல் கண்டு தேம்பினாள். அரக்கியர் கொடுமைக்கு அஞ்சி பேச்சொழிந்து இருந்தபோது அனுமன் ஓங்கி வளர்ந்த ஒரு மரக்கிளையில் ஏறியமர்ந்து கொண்டான்.

**"ஆயிடை யுரையவிந் தழகன் றேவியும்**
**தீயனை யவர்முக நோக்கித் தேம்பினாள்**
**நாயகன் தூதனும் விரைவில் நண்ணினான்**
**ஓய்விலன் உயர் மரம் பனையின் உம்பரான்"**

மரக்கிளையில் அமர்ந்த அனுமன் அரக்கியர் கூட்டத்தினிடையே கூர்ந்து பாத்தான். அவன் சீதாப்பிராட்டியாரை அரக்கியர் கூட்டத்தின் நடுவே கண்டான்.

**"விரிமழைக் குலங்கிழித் தொளிரு மின்னெனக்**
**கரு நிறத்தரக்கியர் குழவிற் கண்டனன்**
**குருநிறத் தொருதனிக் கொண்டல் ஆம் என**
**திருவுருப் பொலியுமோர் செல்வன் தேவியை"**

விரிந்த மேகக் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு ஒளிவீசும் மின்னல் கொடி போன்று கரிய நிறமுள்ள அரக்கியர் நடுவே அழகு நிரம்பிய இராமனின் மனைவியாகிய சீதையைக் கண்டான். கண்டவன் அவளே நாயகன் தேவியென உணர்ந்தான். ஆடினான்; பாடினான்; அங்குமிங்கும் பாய்ந்து ஓடினான்; உலாவினான். இப்பெண்ணின் இலட்சணங்கள் எல்லாம் இராமன் கூறிய சீதையின் இலட்சணங்களோடு ஒத்திருக்கின்றன. அதனால் இப்பெண் சீதையே! **"இராமனின் உயிர் போன்ற சீதையை இராவணன் ஒளித்து வைத்த விதம் மிக நன்று"** என்று நினைத்து அவனை பரிகசித்தான் அனுமன்.

இராவணன் சீதையைச் சிறைவைத்த செயல் இராவணனுடைய உயிரை இராமன் போக்கும் பொருட்டுச் செய்த செயலாகும். அன்றியும் **"இராமன் ஆதிசேடன் என்னும் பாம்பணையினின்றும் நீங்கி இங்கு தோன்றிய மகாவிஷ்ணுவே யாவான். இச்சீதை செந்தாமரை மலரில் வீற்றிருந்த செல்வங்களுக்கு உரிமை பூண்ட இலக்குமியேயாவாள். இதில் சந்தேகமில்லை"** - என்று அனுமன் எண்ணினான்.

**"அறம் அழியாது. நானும் சாகேன். சீதையைத் தேடிக்கண்டு விட்டேன்"** என்று கூறி அனுமன் ஆனந்தம் கொண்டு ஆடிப்பாடி, ஓடி உலாவினான்.

சீதையின் தூய்மையைக் கண்டு அனுமன் வியந்து பேசினான். சீதையின் உடை அழுக்கடைந்தும், பொழிவிழந்தும் காணப்பட்டதாயினும் - அவளது கற்பும், அவள் இராமன் மீது கொண்ட அன்பும் பழுதடையவில்லை என்று பெருமையடைந்தான் இராம தூதன் அனுமன்.

**"சீதையின் கற்பு நிலைக்கும், காதலின் சிறப்புக்கும் இராமனின் புயவலிமையோ! சீதையின் மனவலிமையோ! சனகனின் குலச்சிறப்போ! எதைக் காரணமாக்கிப் புகழ்வேன்"** என்று அனுமன் கூறினான்.

**"அரக்கியர் மத்தியிலே திரிசடையின்றி – வேறுதுணையின்றி பிரிவுத் துயரோடு பெண்ணியல்பு மாறாது கற்பு நிலையில் நிற்கும் சீதையைத் தர்மம் காக்க"** என்று அவன் வாழ்த்தினான். **"கற்புநிலை தவறாது சீதையைக் காத்தது தர்மமா? சனகன் செய்த நல்வினையா? சீதையின் மனத் திண்மையா?** என அனுமன் தன்னைத்தானே கேட்டுப் பெருமையடைந்தான்.

அனுமன் உயர்ந்த மரக்கிளையை அடைந்து அங்கு மறைந்திருந்தான். அப்போது இராவணன் தோன்றினான். இராவணன் வருகின்ற காட்சியை அனுமன் மரக்கிளையிலிருந்து கண்டான்.

எல்லா மலைகளும் ஓரிடத்திற் சேர்ந்தாற் போன்ற தோள்களில் மகரகுண்டலங்கள் அசைந்தாட இளஞ்சூரியன் போல முடிகள் ஒளிவீச இராவணன் சீதையிருந்த அசோகவனத்திற்கு வந்தான். இராவணனை அனுமன் கண்டு இனி என்ன நடக்கப் போகிறது என்று அறிய விரும்பி மறைந்திருந்தான். உடன் வந்த பரிவாரமெல்லாம் அப்பால் அகல இராவணன் தனியே சீதை இருந்த இடம் சென்றதும் **"புலியைக் கண்ட மான் போல"** அவள் அஞ்சி நடுங்கினாள். **"ஜானகி, இராமன் முதலிய எல்லோரும் தீங்கின்றி வாழ்க!"** என அனுமன் மனதிற்குள் வாழ்த்தினான். அப்போது இராவணன் சீதையை நோக்கி **"எனக்கு நீ அருள் செய்வது எப்போது?"** என இரந்து கேட்டான். அவன் தொடர்ந்து **"நீ அருள் செய்யாமையால் நாட்கள் வீணே கழிகின்றன. காம நோயினால்**



**நான் இறந்த பின்னர் என்னைச் சேர்வாய் போலும்"** என்று அவன் வருந்திக் கூறினான்.

தகுதியற்ற வார்த்தைகளைக் கூறிக் கொண்டு தன்னை மேலும் மேலும் இம்சைப்படுத்த நினைக்கும் இராவணனைச் சீதை கொடுஞ்சொற்களால் கூறி அறிவுறுத்தினாள். **"சடாயுவுடன் போரிட முடியாத நீ இராமனுக்கு முன்னே நின்று போரிடுவாயோ? உனது பத்து தலைகளும், இருபது தோள்களும் இராமனது புதுமையான அம்புக்கு இலக்காகத்தான் வேண்டும்"** என்றும் சீதை இடித்துரைத்தாள். அக்கணத்தில் **"இராவணா! நீ பெற்ற ஆயுளும், வரபலமும் யமனது பயத்தைத் தடுக்குமேயொழிய இராமனது அம்பைத் தடுக்குமோ"** என்றும் சீதை அவனிடம் கேள்விக்கணை தொடுத்தாள்.

**"நீ மறைந்து வாழும் இவ்விடத்தை இராமன் தெரிந்து கொண்டு நாளைக்கே வருவார். அப்போது அவர் கோபம் என்னைச் சிறை வைத்துள்ள இலங்கையையும், கடலையும் அழித்துத்தான் சாந்தமடையுமோ? அக்கோபத்தால் உலகமே கலங்கும்"**

இந்நிலையில் அனுமன் கோபங்கொண்டு இராவணனது தலைகளை சிதறி இலங்கையையும் அழித்துச் சீதையை என் தோள்களில் சுமந்து செல்வேன் என எண்ணினான். இராவணன் சீதை மீது கொண்ட காதலினால் கோபத்தைத் தணித்துக் கொண்டவனாக சில வன் சொற்கள் கூறி சீதையை மேலும் அச்சுறுத்தி நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வா! என்று கர்ச்சித்து விட்டு அகன்றான்.

இராவணன் சென்ற பின்பு கரும்பாம்பு விழுங்கி உமிழ்ந்த மதியம் போன்ற சீதாப்பிராட்டியை அரக்கியர் தொடர்ந்து கடுங்குரலில் அதட்டி சீதையை இராவணனுக்கு இசையச் செய்யப் பிரயெத்தனப்பட்டனர். அத்தோடு அரக்கியர் சிலர் விரைந்து சூலம், வேல் முதலிய ஆயுதங்களைத் தூக்கியவாறு புண்ணில் கோலிட்டது போலக் கடுஞ் சொற்களைச் சொல்லி உலகமும் - நீயும் அழியும்படி நடந்து கொண்டாய்! உண்மையை அறியாத அறிவற்றவளாக இருக்கிறாயே என்றும் கூறினர்.

இராவணனும், அரக்கியரும் தனக்குச் செய்துவரும் பெருந் துன்பத்தைக் கண்டும் - தன் மனவுறுதி சிறிதும் தளராத சீதாப்பிராட்டியார் அரக்கியர் கூட்டத்தையும் கொடியோனாகிய இராவணன் இட்ட ஏவலையும் எண்ணிக் கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டு கவலையுடன் நடுங்கினாள்.

இந்நிலையில் மரக்கிளையை விட்டு இறங்க எண்ணிய அனுமன் ஒரு மந்திர வித்தை செய்தான். இதனால் காவல் அரக்கியர்கள் அனைவரும் துயிலுற்றனர். அரக்கியர் துயின்றமை கண்டு சீதை மனம் பதைத்தாள். இராமன் தன்னை மீட்க வரவில்லையே! என நினைந்தும், தன் பிழையை நினைத்தும் மனமுருகி – வருந்தி தான் உயிர் விடுவதே அறத்தின் நெறி எனத் துணிந்து ஒரு மாதவிப்

பந்தரை அமைத்தாள். எரியூட்டித் தான் இறக்கச் சீதாப்பிராட்டி எண்ணியதை அனுமன் கண்டான். அவளின் உள்ளக் கருத்தை உணர்ந்தான். நெஞ்சம் துணுக் குற்றான். அவளது மெய்தீண்டக் கூசி நான் இராமனின் தூதன் என்று கூறிக் கொண்டு வெளிப்பட்டு வந்து, சீதாப்பிராட்டியாருடைய பாதங்களை வணங்கினான்.



**தாய் :** ஷீலா...நீ குமாருடன் ஊர் சுற்றித் திரிவதை அப்பா விரும்பவில்லை.

**மகள் :** ஏனம்மா நான் இராத்திரி லேட்டாக வந்ததாலா?

**தாய் :** இல்லை... இராத்திரி அவன் உன்னைக் காரில் கொண்டு இறக்கி விடாத கோபம் அவருக்கு.

(35ம் பக்க தொடர்ச்சி ...)

## கவனிக்கப்படாத - கவனிக்கப்பட வேண்டிய புலவர்கள்

மேற்கூறிய பாடலில் விரசம் சார்ந்த வர்ணனைகள் இடம்பெற்றிருப்பினும் அதனைத் தவிர்த்து நோக்கும் போது புலவரின் அணிச்சிறப்புக்களும், கற்பனை நயங்களும், ஓசைப் பாங்கும் பிரமிப்பை ஏற்படுத்தவல்லன. (புலவர் பாடலில் உள்ளவற்றைவிட, விரச நயம்மிக்க பாடல்கள் பல நெந்நெறி சார்ந்த இலக்கியங்களிலிருப்பது இவ்வேளை நினைவு கூரத்தக்கது.)

மொட்டை வேலாப் போடியாரின் ஏனைய பாடல்களும் கிடைக்கும் போதுதான் அவர் பற்றி முழுமையாக அறிய முடியும். அத்தருணம் ஏற்படும் வரை மேற்கூறிய பாடல்களை ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாக அன்றி ஒருசில சோறு ஆகக் கொண்டு அன்னாரது கவியாற்றலை ஓரளவு ஊகித்தறிய முடிகிறது என்பதிலும் தவறில்லையல்லவா?

(பி.கு : இன்று வாழ்கின்ற மொட்டை வேலாப் போடியாரின் வாரிசுகள் தமது நினைவுப் பெட்டகங்களிலிருந்து ஒரு சிலவற்றை மீட்டுத் தருவார்களென்று எதிர்பார்ப்போமாக!

ஆரையம்பதியில்.....
அழகிய 22 கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி



அபிராமி ஜீவல்ஸ்





பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329
AD/0008

ஆழகிய 22கரட் தங்கநகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட
வேண்டிய தங்கநகைகளின் சொர்க்காபுரி



சொர்ணம்
நகை
மாளிகை

AD/0040

16, புனிதஅந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152

212, 214 பிரதானவீதி, கல்முனை.
T.P: 0672229121/2229860

59, மட்டக்களப்புவீதி, கல்முனை.
T.P: 067 2220191

Ladshana Stamp
-Computer Rubber Stamp Maker-




# 39A, Baily Road, Arasady, Batticaloa.
Tel: 065 222 4048, 077 69 155 74.
e-mail: ladshana@gmail.com
AD/0024

**இல. 17**



# தென்றலின் குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | | ■ | | | ■ |
| 10 | | | ■ | 11 | | ■ | 12 |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | |
| 15 | ■ | 16 | ■ | 17 | 18 | | |
| 19 | | | 20 | ■ | 21 | | |
| | ■ | 22 | | | | ■ | |

## இடமிருந்து வலம்

01. இந்த நாட்டின் அதியுயர் அதிகாரம் கொண்டவர்.
05. பெரிய மிருகம்.
07. நாள்தோறும் (குழம்பியுள்ளது).
08. பெருமை.
09. திறை.
10. பெண். (குழம்பியுள்ளது)
11. கடனால் உறவுக்குள் இது ஏற்படலாம்.
13. நவதானியங்களுள் ஒன்று.
14. கடலைத் தேடி ஓடுவது.
17. கிராமியக் கலைகளுள் ஒன்று. (குழம்பியுள்ளது)
19. உலோக வேலை செய்யும் இடம்.
21. மென்பந்து போன்று பூப்பூக்கும் மரம். (திரும்பியுள்ளது)
22. சில இடங்களுக்குச் செல்வதற்கு இது தேவை. (திரும்பியுள்ளது)

## மேலிருந்து கீழ்

01. ஆங்கில மாதங்களுள் ஒன்று.
02. பொருளாளர். (குழம்பியுள்ளது)
03. மூன்று.
04. ஒரு வகைக் கீரை.
05. பெரகராவுக்குப் புகழ் பெற்ற இடம்.
06. வைக்கோலைக் கட்ட வைக்கோலால் செய்யப் படும் கயிறு. (தலைகீழ்)
08. மாதாந்தம் வெளிவரும் சஞ்சிகை.
11. கங்குல் என்பதன் எதிர்ச்சொல். (குழம்பியுள்ளது)
12. பகலவன்.
14. பெண்கள் சிலர் இதனை வளர்த்து அழகுபடுத்தி மகிழ்வர்.
15. பழைய சினிமாப் படங்களில் முடிவை அறிவிக்கும் சொல்.
16. உறுதி. (தலைகீழ்)
18. அருகிவரும் அரைக்கும் கருவி . (குழம்பியுள்ளது)
20. வேதம். (தலைகீழ்)

✳ விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

✳ தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

✳ முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/- 200/-, 100/- வழங்கப்படும்.

✳ போட்டி முடிவுத்திகதி 15.12.2014

✳ விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி இல. 17**
**44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி,**
**மட்டக்களப்பு.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 16 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மூ | 2 லி | 3 கை | | 4 வி | 5 ப | த் | 6 து |
| 7 தா | க | ம் | | 8 லை | க | | ரு |
| ட் | | மா | | 9 வா | ல | ய | ம் |
| டி | | 10 று | 11 ன் | சி | வ | | பு |
| | 12 உ | | ன | | 13 ன் | 14 தே | |
| 15 கு | ய | 16 வ | ன் | | | 17 வா | 18 தி |
| 19 ள | ம் | அ | க | | 20 ச | ங் | கு |
| 21 வி | ர | ல் | | 22 க் | தி | கு | |

## "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல. - 16 இல் வெற்றி பெற்றோர்

**முதலாம் இடம்**

எஸ். மதிவதனி
கடற்கரை வீதி,
களுவாஞ்சிகுடி.

**இரண்டாம் இடம்**

வ.கீர்த்தனா
குருமன்காடு,
வவுனியா.

**மூன்றாம் இடம்**

த.குமரன்
சாகாமம் வீதி,
அக்கரைப்பற்று.

**பாராட்டுப் பெறுவோர்**

- க.தங்கராசா
  ஆரையம்பதி.
- டி.நிசாந்தன்
  வவுணதீவு.
- மு.இன்பமலர்
  கோட்டைக்கல்லாறு.
- க.பிரதீபன்
  பதுளை.




## மட்டக்களப்பு மாநகர சபைப் பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி

மட்டக்களப்பு மாநகர சபையின் கீழுள்ள பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி மாநகர ஆணையாளர் மா. உதயகுமார் தலைமையில் மாநகர சபைப் பாட்டாளிபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் கீழுள்ள எல்லைவீதிப் பாலர் பாடசாலை, நாவற்குடா சுத்தானந்தா பாலர் பாடசாலை, புதூர் பாலர் பாடசாலை, இருதயபுரம் பாலர் பாடசாலைகளின் சிறார்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்தினர். இதில் இவ்வருடச் சம்பியனாக எல்லைவீதிப் பாலர் பாடசாலை தெரிவானது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரி கிறிஸ்டினா மேரி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய சிறாருக்கான பரிசில்களை வழங்கி வைத்தனர்.



# நாட்டாரியல் ஓர் ஆய்வு

13 கலாபூசணம் ஆரையூர் அருள்

தாயிறந்தபோது,

என்னப் பெத்த சீதேவியே
கப்பல் சுணங்கிவரும் அம்மா
நீங்கள் போட்ட கடிதம் முன்னவரும்
நான் கடிதத்தைக் கண்டவுடன்
கண்ணீரை இறக்கிவிட்டேன் என்றும்

தந்தை இறந்த வேளை,

ஐயாநீ வாற வழியிலையோ
என்ர கண்ணுக்கு
வழிமறித்து நில்லனையா
நீமாண்ட இடத்திலையோ
மாமரமா நில்லனையா
வேலி அருகிலயோ நீ
வீரியமாய் நில்லனையா என்றும்

சகோதரி இறந்தபோது தங்கை பாடுவது,

என்ர பிறவியரே
நீங்க பாயில் படுக்கயில்ல
பத்து நாள் செல்லயில்ல
சிவனை வணங்கியல்லோ - நான்
சிவ பூசை செய்துவந்தேன் - என்ர பிறவியரே
நீங்க தெருவில் கிடந்தாலும் - நான்
உங்கள் தேரிலே கூட்டிவர அக்கா
நாம் கூட்டில் இருந்தமம்மா - எங்கடை
கூடு கலைஞ்சதக்கா - என்றும்,

முல்லைத்தீவு யாழ்ப்பாணம் கரவெட்டி மூதூர் போன்ற இடங்களில் ஒப்பாரி பாடுவர்.

கிழக்கிலங்கையில் தாயாரின் ஒப்பாரி.

பொன்னான மேனியிலே - ஒரு
பொல்லாத நோய் வந்ததென்ன?



தங்கத் திருமேனியிலே - ஒரு
தகாத நோய்வந்த தென்ன?
பொன்னும் அழிவாச்சே - உன்
பொன்னுயிருந் தீங்காச்சே
காசு அழிவாச்சே-உன்
கனத்த உயிர் தீங்காச்சே-என்றும்

கணவன் இறந்தால் மனைவியின் ஒப்பாரி,

முத்துப் பதித்த முகம்
முதலிமார் மதித்த முகம்
தங்கம் பதித்தமுகம்
தரணிமார் மதித்த முகம்
தாலிச் சரடிழந்தேன் - நான்
தங்கப்பொன் மாற்றிழந்தேன்
முத்துச் சரடிழந்தேன்-நான்
முருக்கம் பூப் பட்டிழந்தேன் - என்றும்

பாடுவதனைக் காணலாம்.

(முற்றும்)

# தரம் -05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காகத்

## தென்றல் தொகுத்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

ஆசிரியர்:- யோ.இ.ஞானரெட்ணம்

**பகுதி :- 1** **தொடர்ச்சி...**

* ஒரு விளையாட்டுமதானத்தில் மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல் ஆகிய இல்லங்களுக்குச் சொந்தமான கூடாரங்கள் உள்ளன. மருதத்திற்குத் தெற்குப் பக்கமாக 25m தூரத்தில் குறிஞ்சி அமைந்துள்ளது. குறிஞ்சிக்கு மேற்கே 20m தூரத்தில் நெய்தல் உள்ளது. நெய்தலுக்கு வடக்கே 25m தூரத்தில் முல்லை உள்ளது.

22) முல்லையிலிருந்து எத்திசையில் மருதம் அமைந்துள்ளது.
i. வடக்கே ii. மேற்கே iii. கிழக்கே

23) நெய்தல் இல்லம் மருதத்திற்கு எத்திசையில் அமைந்திருக்கிறது.
i. நிருதிமூலையில் ii. அக்கினிமூலையில் iii. ஈசானமூலையில்

24) மருத இல்லத்திற்கும், முல்லை இல்லத்திற்கும் இடையேயுள்ள தூரம் யாது?
i. 25m ii. 20m iii. 15m

* இலக்கம் 25-26 வரை தரப்பட்டுள்ள வினாக்களில் முதலாவதாக தரப்பட்டுள்ள உருவை உருவாக்குவதற்குத் தேவையான இரு உருப்பகுதியைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

25) 

26) 

* இலக்கம் 27-28 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள எண்களுக்கு இடையே நிரலாகவும், நிரையாகவும் அமைந்துள்ள முறையினை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

27)

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 12 | 14 | i. | 24 22 |
| 15 | 17 | 19 | ii. | 18 16 |
| 20 | .... | .... | iii. | 22 24 |

28)

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | 21 | 14 | i. | 2 8 |
| 22 | 15 | 8 | ii. | 9 2 |
| 16 | .... | .... | iii. | 13 15 |

* 'A' கடிகாரம் காட்டும் நேரத்தினை விட 1மணித்தியாலம் 30நிமிடங்கள் முந்தி 'B' கடிகாரம் காட்டுகின்றது. 'C' கடிகாரம் காட்டும் நேரமானது 'B' கடிகாரத்தின் நேரத்திலும் 60நிமிடங்கள் குறைவானதாகும். 'A' கடிகாரத்தின் நேரம் மு.ப 7.30 எனில்

29) 'B' கடிகாரம் காட்டும் நேரம் யாது?
i. மு.ப 9.00 ii. மு.ப 8.30 iii. மு.ப 9.30

30) 'C' கடிகாரம் காட்டும் நேரம் யாது?
i. மு.ப 6.30 ii. மு.ப 7.30 iii. மு.ப 8.00

31) என்னிடம் 4 ரூபா 80 சதம் இருந்தது. என் நண்பனிடம் இருந்த பணத்திலிருந்து 1ரூபா 60 சதம் வாங்கினால் இருவரிடமும் இருக்கும் பணம் சமனாகும். எனில் நண்பரிடமிருந்த பணம் எவ்வளவு?

| i. ரூபா 8.00 | ii. ரூபா 7.50சதம் | iii. 6ரூபா 40 சதம் |

* நூலகமொன்றில் உள்ள புத்தகங்கள் பற்றிய விபரம் வரிபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




32) நூலகத்திலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கையில் ஆங்கிலப்புத்தகங்களின் எண்ணிக்கை எப்பின்னமாகும்?

i. 1/4 ii. 1/8 iii. 1/6

33) நாவல் புத்தகங்களின் எண்ணிக்கைக்கு சமனாகவுள்ள இருபுத்தகங்கள் எவை?

| i. கணிதம், தமிழ் | ii. விஞ்ஞானம், ஆங்கிலம் | iii. கணிதம், விஞ்ஞானம் |

34) நூலகத்திலுள்ள கணிதப்புத்தகங்களின் எண்ணிக்கை 30 எனில் ஆங்கிலப்புத்த கங்களின் எண்ணிக்கை யாது?

i.60 ii. 45 iii. 15

35) ஆங்கிலப் புத்தகங்களின் எண்ணிக்கை போன்று இரு மடங்கு எண்ணிக்கை உடைய புத்தக வகை எது?

i. நாவல்கள் ii. கணிதம் iii. தமிழ்

36)




வெற்றிடத்தில் வரவேண்டிய எண்

i. 36 ii. 13 iii. 28

* தோட்டமொன்றில் கத்தரி, வெண்டிச் செடிகளின் எண்ணிக்கை 100ஆகும். கத்தரிச் செடிகளை விட வெண்டிச் செடிகள் 30 குறைவாக உள்ளன. அவ்வாறாயின்.

37) தோட்டத்திலுள்ள கத்தரிச் செடிகளின் எண்ணிக்கை யாது?

| i. 35 செடிகள் | ii. 65 செடிகள் | iii. 50 செடிகள் |

38) தோட்டத்திலுள்ள வெண்டிச் செடிகளின் எண்ணிக்கை யாது?

| i. 30 செடிகள் | ii. 45 செடிகள் | iii. 35 செடிகள் |

* கத்தரிச் செடியொன்றின் விலை 75 சதம். வெண்டிச் செடியொன்றின் விலை 1.25 சதம் எனில்

39) கத்தரிச் செடிகளை வாங்கினால் நீர் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

i. 46ரூபா 50சதம் ii. 48ரூபா 75சதம் iii. 45ரூபா 75சதம்

40) வெண்டிச் செடிகள் அனைத்தையும் வாங்கிய பின்னர் செடியொன்றினை 25சதம் இலாபம் வைத்து விற்றால் உமக்கு கிடைக்கும் இலாபம் எவ்வளவு?

i. 8ரூபா 75சதம் ii. 9ரூபா 50சதம் iii. 10ரூபா 75சதம்




# புத்தம்புதிய கம்பியூட்டர்கள் ரூபா. 37,500க்கு.

சகலவிதமான கணனிக்குரிய பாகங்களையும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## IT Solution

(இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)

இல.233, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி - 065-2224857, 071-3434634 ஈ.மெயில்- itsolutionsl@yahoo.com

AD/0003

*Total Solution For Your Information Technology Needs*

# HEADWAY
## SCHOOL OF LANGUAGES

### What do we Offer

- General English for Adults.
- IELTS/ A1 Preparation Classes
- Cambridge Exam Preparation Classes
- Professional English Courses.
- English for Hospitality Sector
- English for Banking Staff
- English for Nurses
- Business English.
- Writing Courses.
- IT- ICT Classes.



**Batticaloa:**
P.O. Box 20,
New Ancheneye Complex,
Arasady, Batticaloa.
T: 065 2225612 | 065 2224042

**DynEd – Coordinating Office:**
Realty Plaza,
Level 2 – 39,
Ja-Ela, Sri Lanka.
T: 011 2244495

**Kalmunai (Franchise):**
R. K. M. School Road,
Kalmunai.
T: 077 9080550

**Kaluwanchikudy (Franchise):**
C/O IBS,
Main Road,
Kaluwanchikudy.
(100m from Kaluwanchikudy DS office)
T: 0 77 8011285

AD/0039

Find us on Facebook : www.facebook.com/headway001
Watch this Video : http://www.youtube.com/watch?v=MESj3iRj_6s

வனசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. (WP1301)